விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 06 செவ்வாய்க்கிழமை (21.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

## கொரோனா தடுப்பு மருந்து ஒக்ஸ்போர்ட் பல்கலையின் பரிசோதனை வெற்றி



(லண்டன்)
ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் உருவாக்கிய கொரோனா வைரஸ் தடுப்பூசி, பாதுகாப்பானது என்பதுடன் நோயெதிர்ப்பு சக்தியை அதி 23



## வவுனியாவில் பலத்த காற்று
## மரக்கிளை முறிந்து விழுந்ததில் குழந்தை பலி


(வவுனியா)
வவுனியா கனகராயன்குளம் - ஆயிலடிப் பகுதியில் வேப்ப மரம் முறிந்து விழுந்ததில் ஒன்றரை வயதான குழந்தை உயிரிழந் 23

## கிளிநொச்சியில் எழுமாறாக கொரோனா பரிசோதனை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை முதல் மூன்று நாட்களுக்கு எழுமாறாக 70 பேரிடம் கொரோனா தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மத்திய சுகாதார 23

# சுகாதார உத்தரவாதமின்றி பாடசாலைகளை திறப்பது ஆபத்து

## முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்



(கொழும்பு)
சுகாதார உத்தரவாதமின்றி பாடசாலைகளை மீளத் திறப்பது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆபத்தாக அமையும் என ஐ.தே.க பொதுச் செயலாளரும் முன்னாள் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு 23

## காத்தோட்டிக் காய்க்கு யாழில் நேற்று தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)
ஆடி அமாவாசை விரத நாளான நேற்று திங்கட்கிழமை யாழில் காத்தோட்டிக் காய்க்குத் தட்டுப்பாடு நிலவியது.
ஆடி அமாவாசை 23

## வரம்பு மீறிய அதிகாரம் அழிவுக்கு வழி வகுக்கும்

### அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)
வரம்பு மீறிய அதிகாரம் அழிவுக்கே வழி வகுக்கும் என தேசிய மக்கள் கட்சி கூட்டணியின் தலைவரும் அதன வேடபாளருமான அநுரகுமார 23

## அனைத்து பாடசாலைகளுக்கும் ஒக்ரோபர் 9ஆம் திகதி 2ஆம் தவணை விடுமுறை

(கொழும்பு)
அனைத்து அரச பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக ஒக்ரோபர் 9ஆம் திகதி மூடப்பட்டு நவம்பர் 16ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 23

## பல்கலைக்கழக மாணவர்களை பயன்படுத்தும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்

9ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த (உ/த) ஒக். 12
## புலமைப்பரிசில் ஒக். 11

(கொழும்பு)
2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறி 23

## வர்த்தமானி அறிவித்தல் மூலம் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)
சுகாதார அமைச்சினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் படி மக்கள் ஒத்துழைத்தால் மாத்திரமே அதி 24



## வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கல் அதிகரிக்கின்றது

சி.வி.விக்னேஸ்வரன் 15

## சீரற்ற காலநிலை சில தினங்கள் தொடரும்

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)
நாட்டின் தெற்கு கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக 23

## சுழிபுரம் மேற்குப் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதல்

### 3 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத் 23

## புதிய சட்டத்தை உருவாக்கி

# அடிப்படைவாதத்தை நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழிப்போம்

## பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**அடிப்படைவாதத்தை நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழித்து, தேசிய பாதுகாப்பினைப் பலப்படுத்தி, புதிய அரசாங்கத்தில் பாதுகாப்புசார் சட்டம் திருத்தப்பட்டு, புதிய சட்டம் உருவாக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சுபீட்சமான எதிர்கால கொள்கையினை செயற்படுத்தும் பலமான பாராளுமன்றம் தோற்றம் பெற வேண்டும் என்பதில் பெரும்பாலான மக்கள் அதிகளவில் அக்கறை கொண்டுள்ளார்கள். நிறைவேற்றுத்துறையும், சட்டத்துறையும் முரண்பட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்த அனுபவம் மக்களுக்கு உண்டு. ஆகவே மீண்டும் அந்தத் தவறை செய்ய மாட்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு, அரசியலமைப்பின் 17 மற்றும் 19 வது திருத்தங்களில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருதலை பட்சமாகவே செயற்படுகின்றன என்பதற்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டு. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொதுத்தேர்தலில் அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக மேடை யேறுகிறார்கள்.

உயர் அதிகாரிகளை நியமிக்கும் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளார்கள். தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பொதுஜன பெரமுனவிற்கு வாக்களிக்க வேண்டாம் என குறிப்பிடுகிறார். ஆகவே இவர்களின் செயற்பாடுகளினால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளை பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் புதிய அரசாங்கத்தில் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் என்றார். (ம-3)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு **தண்டராசா கிருபாகரன்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**
**சிவகாமசுந்தரி தண்டராசா**


அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-9927)

**ஆசிரியர் கழகம்**
**யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி**

# மரண அறிவித்தல்



## வயித்தி கணேசு

வட்டுத் தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வேரம் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வயித்தி கணேசு நேற்று (2020.07.20) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்தி - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் ரேவதியின் அன்புக் கணவரும் பாலபாஸ்கரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (பிரான்ஸ்), ரேனுகாதேவி (இந்தியா), சர்மிலா (சுவிஸ்), கர்சினி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணபிள்ளை, இரத்தினம், தம்பு, சின்னத்துரை, பொன்னார் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசையா, குணம், காலஞ்சென்ற இராணி, புனிதவதி, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும் அஜந்தா, ராஜி, காலஞ்சென்ற அருட்செல்வம், முரளிதரன், தங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் நந்தனா, கனா, சுலக்ஷன், சயூசன், முகுந்தன் (பிரான்ஸ்), றெவேக்கா (இந்தியா), இல்சன், இஷான், சமிரா (சுவிஸ்), ஈழவன், இயல், விமல்ராஜ் (பிரான்ஸ்), சஜீவன், பானுஜா, கபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேரம்,**
**மூளாய்.**

(3370)

தகவல்:
**குடும்பத்தினர்**



உங்கள் வாக்கும் மாற்றத்தை ஏற்படுத்தட்டும்

எங்கள் ஆசான்
க. அருந்தவபாலன்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

2 6

அருந்தவபாலன் Sir இன் மாணவர்கள்

(C-073)

நாடாளுமன்றத் தேர்தல் - 2020

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.மாவட்டம்
"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"





நடராஜர்
காண்டீபன்
(சட்டத்தரணி)
சட்ட ஆலோசகர்,
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

2 4 10

(C-071)

தாயகம் - தேசியம் - சுய நிர்ணய உரிமை

## ஹெரோயின் போதைப்பொருள் ஒப்படைப்பு

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் கீழ் இருந்த மூன்று பில்லியன் பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் ரக போதைப்பொருள் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடற்படையினால் கைப்பற்றப்பட்ட 330 கிலோ கிராம் போதைப்பொருளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரகசிய பொலிஸ் பிரிவு மூலம் இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்திடம் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.**



இரத்தினபுரி - சீவலி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டபோதே, ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் போதைப்பொருள் பாவனையும் பாலியல் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் குறித்த செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என ஜனாதிபதி கடும் தொனியில் தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு முதல் இரத்தினபுரி வரையிலான அதிவேக வீதிக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சுரங்கத்தொழிலாளர்கள் குறித்த அனைத்து அனுமதிப் பத்திரங்களையும் ஒரு நிறுவனத்தின் ஊடாக வழங்கவும் ஜனாதிபதி இதன் போது இணக்கம் தெரிவித்தார். (ஐ-4)

## சுகாதார வழிகாட்டி வர்த்தமானி குறித்து விசனம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளின் முதல் பிரதியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டும் சில நடைமுறைகள் நீக்கப்பட்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மேலும் மோசமடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படும் நிலையில், தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தகைய மாற்றங்கள் குறித்து விசனமளிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளை முதல் பிரதியில் உள்ளவாறே வர்த்தமானிப்படுத்துமாறு சுகாதார அமைச்சரை வலியுறுத்தியிருப்பதுடன், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட நடைமுறைகளில் ஏன் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றும் இது வைரஸ் தொற்றை மேலும் தீவிரப்படுத்தும் பட்சத்தில் அரசாங்கத்தினால் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் வாக்களிக்கவிருக்கும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ-4)

# தற்கொலை குண்டுதாரி சாரா தப்பியது எவ்வாறு?

## விசாரணையில் வெளிவந்த தகவல்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சாரா என்றழைக்கப்படும் தற்கொலை குண்டுதாரியான புலஸ்தினி எவ்வாறு தப்பி ஓடியுள்ளார் எனப் புலனாய்வின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.**



இது தொடர்பாக புலனாய்வு வட்டாரங்களில் இருந்து தெரிய வருவதாவது.

இரண்டாம் கட்டத் தாக்குதலுக்குத் தயாராக இருந்த சாரா மற்றும் சஹ்ரானின் சகோதரர்கள் சாய்ந்தமருதில் மறைந்து தயாராக இருந்த போது தேசிய புலனாய்வுப் பிரிவின் தகவலாளியான லொறி சாரதி மார்ச் மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் இருந்து சம்மாந்துறை பிரதேசத்தில் களஞ்சியசாலை ஒன்றுக்கு கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்மாந்துறையை முற்றுகையிட்டனர்.

இந்த தகவலை வைத்து அம்பாறை மாவட்ட தேசிய புலனாய்வுப் பிரிவினர் அந்த பகுதியைச் சல்லடைபோட்டு தேடிய நிலையில் 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி பொருட்களை இறக்கிய வீட்டைக் கண்டுபிடித்தனர்.

கண்டுபிடிக்கப்பட்ட வீட்டை முற்றுகையிட்ட புலனாய்வுத் துறையினர் கல்முனையில் மரக்கறி வியாபாரம் செய்து வந்தவரான நியாஸ் என்பவர் அம்பாறையில் சப்பாத்து தொழிற்சாலை வைத்திருப்பதாகவும் அந்த தொழிற்சாலையை அங்கிருந்து அகற்றுமாறு தெரிவித்ததையடுத்து அந்த தொழிற்சாலைப் பொருட்களை வைப்பதற்கான களஞ்சியசாலையை 5 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்கு வழங்கியுள்ளதுடன் அந்த களஞ்சியசாலை பூட்டியிருந்துள்ளது.

குறித்த களஞ்சியசாலையைத்திறப்பதற்காக வீட்டின் உரிமையாளரிடமிருந்த டம்மி சாவியைப் பயன்படுத்தி அந்த களஞ்சியசாலையைத்திறக்க முற்பட்டபோது அங்கு பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் சென்ற நிலையில் அங்கு குண்டு தயாரிப்பதற்கான வெடி பொருட்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடிகள் மீட்கப்பட்டன.

குண்டு வெடிப்பு நடப்பதற்கு முன்னர் சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டாளைச்சேனை பகுதியில் வாடகை வீடுகள் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் சம்மாந்துறையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டின் கராச் மட்டும் ஆயுத களஞ்சியசாலையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலின் அடிப்படையில் இதே நேரத்தில் தேசிய புலனாய்வுப் பிரிவின் இன்னொரு குழுவினர் நிந்தவூர், அட்டாளைச்சேனையில் தங்கியிருந்த வீடுகளை முற்றுகையிட்ட போது அவர்கள் அங்கிருந்து தப்பி வான் ஒன்றில் சாய்ந்தமருது வெரிவேரியன் கிராமத்தில் உள்ள வீட்டை சென்றடைந்துள்ளனர்.

அப்போது சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி 5 கிலோ எடை கொண்ட குண்டை அவரது இடுப்பில் கட்டியவாறு வானில் சென்றதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் ஏப்ரல் 26 ஆம் திகதி மாலையில் வீதி போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசியில் வெரிவேரியன் கிராமத்தில் ஒருவர் துப்பாக்கியால் துப்பாக்கிப்பிரயோகம் செய்வதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த பகுதிக்கு இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையின் தேசிய புலனாய்வுப் பிரிவினர் பொலிஸார் நகர்ந்தபோது அங்கு 3 குண்டு வெடிப்பு இடம்பெற்றதுடன் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமும் இடம்பெற்ற நிலையில் சஹ்ரானின் மனைவி, குழந்தை காப்பாற்றப்பட்டதுடன் அதில் 17 பேர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன் ஆயுதங்களையும் மீட்டனர்.

மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்ட நிலையில் ஏனையவர்களின் மரபணுப் பரிசோதனை பொருந்திய நிலையில் சாராவின் தாயாரின் மரபணு பரிசோதனையில் எதுவும் பொருந்தவில்லை. இரண்டாம் தரமும் பொருந்தவில்லை.

இதையடுத்து புலனாய்வுத் துறையினர் சாரா தப்பி ஓடக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரிய வந்த நிலையில் தேசியப் புலனாய்வுத் துறையினர் அவரை தேடத் தொடங்குகின்றனர். அதில் முதற்கட்டமாக சாராவின் ஊரான மட்டக்களப்பு மாங்காடு பிரதேசத்தில் தேடிய போது அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. அதில் சாரா உயிருடன் இருப்பதுடன் புலனாய்வுத் துறையினரின் கண்களில் மண்ணைத்தூவி தப்பியுள்ளார் எனத் தெரியவந்தது.

இந்த நிலையில் அந்த பகுதியில் 3 வீடுகளில் மாறிமாறி தங்க வைக்கப்பட்டதற்கான நிரந்தர சாட்சி ஒன்றின் மூலம் தகவல் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து புலனாய்வுப் பிரிவினர் தேடிய தகவலுக்கு அமைய சாராவின் தாயாரின் சகோதரியான கீதாவின் கணவரின் சகோதரான தேவகுமார் இலங்கையில் ஏதோ ஒரு கடற்கரை பரப்பில் இருந்து சாரா இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவலின் பிரகாரம் அவரை சி.ஐ.டியினர் வீட்டில் வைத்து கைது செய்தனர்.

அதேவேளை முன்னாள் பொலிஸ் உப பரிசோதகர் நாகூர் தம்பி அபூபக்கர் சாராவின் குடும்பத்துடன் ஒட்டி உறவாடி உண்டு மகிழ்ந்து உறவை இறுதிவரை பேணிவந்த நிலையில் மாங்காட்டில் தலைமறைவாகி இருந்த சாராவை அவர் காரில் ஏற்றி சென்றுள்ளார் என தேசியப் புலனாய்வுப்பிரிவுக்குக் கிடைத்த நிரந்தர சாட்சி ஒன்றின் தகவலின் பிரகாரம் அவரை அக்கரைப்பற்றில் அவரது வீட்டில் வைத்து கடந்த 13 ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் சி.ஐ.டியினர்- கைது செய்தனர்.

தேசியப் புலனாய்வுப்பிரிவின் தகவல்களின் அடிப்படையில் சாரா அங்கிருந்து தப்பி இந்தியாவுக்கு ஓடியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளதுடன் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதுடன் இதனுடன் தொடர்புபட்ட பலர் மிக விரைவில் கைது செய்யப்படுவர் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-4)

# கட்சியின் தலைமைக்கு நானே தகுதியானவன்

## ரணிலுக்கு சவால் விடுக்கும் நவீன்







(கொழும்பு)

கடந்த 26 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வரும் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் அந்த தலைமைத் துவத்தை ஏற்பதற்கு தேவையான தகுதி தன்னிடம் இருப்பதாக நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹற்றன் திம்புல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான்நேரடியாக பேசிவேலைகளை செய்யும் அரசியல்வாதி. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் உயர் மட்டத்தில் இருக்கின்றேன் என நினைக்கின்றேன்.

எனக்கு கட்சியின் தலைவராக முடியும் என எண்ணுகிறேன். நான் கட்சியின் தலைவராக திரிவாகி நாட்டின் உயர் பதவிகளுக்கு செல்வேன். ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கு செல்வேன். அப்படி சென்றாலும் நான் 20 ஆண்டுகள் அரசியலில் இருக்கும் நுவரெலியா மாவட்ட மக்களுக்கே முதலில் வேலை செய்வேன்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே நான் மகிந்த ராஜபக்ஷவுடன் மூன்றாண்டுகள் இணைந்திருந்தேன். இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பி வந்து தொடர்ந்தும் கட்சியில் இருப்பேன். ஐக்கிய தேசியக்கட்சியை எவராலும் அழிக்க முடியாது. இது உயிரப்புடன் இருக்கும் கட்சி.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும் மாற்றம் தேவை. ஒருவர் 26 ஆண்டுகள் கட்சியின் தலைவராக இருக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கொரோனாவை விட ஆபத்தாக மாறிய பொலிஸார்

(கொழும்பு)

பொலிஸார்இப்போது கொரோனாவை விட ஆபத்தானவர்களாக மாறியிருக்கிறார்கள் என்று பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அவர்,

"நவம்பர் 16 ஆம் திகதி இந்த அரசாங்கத்தின் வருகையால் பொலிஸார் ஒரு விசித்திரமான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஜனாதிபதி கொடுத்த சிறப்புத் தூண்டுதல் அல்ல. ஜனாதிபதியைச் சுற்றியுள்ள ஒரு குழுவினர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் காய்ச்சலின் ஒரு பகுதி இப்போது அவர்களுக்கு பரவியுள்ளது.

பொலிஸார் இப்போது கொரோனாவை விட ஆபத்தானவர்கள். கொரோனாவால் பாதிக்கப்பட்ட பின்னர் குணப்படுத்த முடியும். பொலிஸாரிடம் பிடிபட்டால் குணப்படுத்த இயலாது. நேரடியாக தலை வெடிப்பதற்கு சுட்டுக் கொன்று விடுவார்கள். அதுதான் உண்மை என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மாணவன் சடலமாக மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - சாலியவெவ - மேல் புலியங்குளம் - மீகஸ் வேவ பிரதேசத்தில் கால்வாய் ஒன்றில் பாடசாலை மாணவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த மாணவன் கால்வாயில் வீழ்ந்து உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

17 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவன் இருவருடன் நிலக்கடலை பயிர்ச் செய்கைக்குச் சென்றுள்ள நிலையில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மாணவன் வெளியே சென்று நீண்ட நேரம் வீடு திரும்பாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# குருநாகல் மரபுரிமை உடைப்பு சம்பவம் மகிந்தவுக்கு ஞானசாரதேரர் எச்சரிக்கை

(குருநாகல்)

மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டுமாயின் குருநாகல் மரபுரிமை உடைப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.

அத்துடன். கோட்டாபய ராஜபக்ஷ போன்றவர்களது ஆட்சியில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது என தாம் நம்பியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகலில் உடைக்கப்பட்டுள்ள வரலாற்று அடையாளமான புவனேகபாகு மன்னனுடைய அரசசபையை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஞானசார தேரர் அங்கு சென்றிருந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷக்களது பெருமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர்களுக்கு கீழ் உள்ளவர்களே இந்த உடைப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிகிரியாவிற்கு சென்ற தமிழ் இளைஞரொருவர் அங்குள்ள சுவரில் கீறியதற்காக அவர் கைது செய்யப்பட்டார் என்றும் அதனை அண்மித்த விகாரையொன்றில் இளைஞர்கள் சிலர் முறை தவறாக ஒளிப்படம் எடுத்ததற்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும் வரலாற்றுச் சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க கட்டடம் உடைக்கப்பட்டமைக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? என்று கேள்வியெழுப்பியுள்ள அவர் பலமற்ற பொதுமக்கள் மீதுதான் சட்டம்



பாயுமா? என்றும் குருநகல் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நீதியை நிலைநாட்ட வேண்டும் எனவும் ஒரு சதமும் மக்களின் வரிப்பணத்தில் இல்லாமல் இதனை தகர்த்தவர்களது சொந்தச் செலவில் கட்டடம் புனரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-4)

# வெள்ளத்தில் மூழ்கிய வீதிகள்

(கொழும்பு)

கொழும்பில் பெய்து வரும் அடைமழை காரணமாக வீதிகளில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கிருலப்பனை பேஸ்லைன் சந்தி வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதனால் ஹைலெவல் வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





நேற்று அதிகாலையில் இருந்து அடைமழை பெய்து வரும் நிலையில் கொழும்பின் பல்வேறு வீதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதுடன். போக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

# பேருந்து - வான் மோதல் நால்வர் படுகாயம்



(அம்பாறை)

அம்பாறை கல்முனை பகுதியில் தனியார் பேருந்து ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள மருதமுனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் தனியார் பேருந்து பகுதியளவில் சேதமடைந்ததுடன் வான் முற்றாக சேதமடைந்துள்ளது.

இதன்போது வானில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் தனியார் பேருந்தை செலுத்திய சாரதி கல்முனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். (ஐ)



# மயிலிட்டி மீன்பிடி இறங்கு துறைக்கு எரிபொருள் வழங்க ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸின் முயற்சியில் உடன்படிக்கை கைச்சாத்து




(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தினை பயன்படுத்தும் மீன்பிடிக் கலங்ளுக்கு எரிபொருள் வழங்குவதற்கான உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நீண்டகாலமாக இருந்த குறித்த மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் தொழிலாளர்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து அத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு பலநாள் மீன்பிடி கலங்கள் உள்ளிட்ட பல மீன்பிடிக் கலங்கள் அத்துறைமுகத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் அங்கு எரிபொருள் நிரப்புவதில் சிக்கல் நிலை உருவாகியிருந்தது.

இந்நிலையில், அத்துறைமுக நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனத்தக்கு குறித்த விடயத்தை கொண்டு வந்திருந்தனர்.

இந் நிலையிலேயே நேற்று எரிபொருள் வழங்குவதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த உடன்படிக்கையில் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர் வடிவேலு சத்தியநாதன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5)

## எல்லை தாண்டி மீன்பிடிக்கச் சென்றவருக்கு கொரோனா பரிசோதனை

(கொழும்பு)

மீன்பிடி நடவடிக்கையில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீனவர் ஒருவர், நீதிமன்றத்தின் அனுமதியுடன், கொரோனா தொற்றை கண்டறியும் பி.சி. ஆர். பரிசோதனைக்குட்படுத்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


கடற்படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்ட அவர், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த நபரே இவ்வாறு வழிதடுமாறி, சர்வதேச கடல் எல்லைக்குள் சென்றுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் அவர் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டபோதே, அவரை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்த்து பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்த நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

குறித்த மீனவர், நேற்று இரவு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (5)

## இராணுவம் அரசியலில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு; மறுத்தார் ருவான் வணிகசூரிய



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அரசியலில் ஈடுபட்டு வருவதாக சில அரசியல்வாதிகள் குற்றம்சாட்டுகிறார்கள்.இது தொடர்பில் பொது மக்களிடம் விசாரித்துப் பார்த்தால் இராணுவத்தினர் அரசியலில் ஈடுபடுகிறார்களா? இல்லையா? என்பது தெரியும் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இலங்கை இராணுவத் தளபதி யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதிக்கு விஜயத்தினை மேற்கொண்டு அங்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் கையளித்தார். இது தொடர்பில் சில அரசியல்வாதிகள், இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டுகிறார்கள். இதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இராணுவத்தினர் ஆகிய எமக்கு பொதுமக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளை செயற்படுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி நாங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வருகின்றோம்.அத்தோடு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5)

## விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

திறன் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான.விண் ணப்பங்கள் கோரப்பட்டு இப் போட்டித் தொடருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.03. 2020 ஆக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்போட்டித் தொடருக்கான முடிவுத் திகதி 24.07. 2020 ஆக தேசிய உற்பத்தித் திறன் செயலக இணையத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது பாடசாலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் குறித்த போட்டித் தொடர் 14.08.2020 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் 14.08.2020 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு தங்களது விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (5)

## குருநகரில் மின்னல் தாக்கம்



(குருநகர்)

குருநகர் தொடர்மாடிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மின்னல் தாக்கியதில் கட்டடத்தின் ஒரு பகுதியும் அப் பகுதியில் வீடுகளிலிருந்த மின் உபகரணங்கள் பாதிப்படைந்தன.

இக் குடியிருப்புப் பகுதியில் இடிதாங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (4-5-106)

# யாழ் கிரிக்கெட் சம்பியன் வெற்றிக்கிண்ணம் சென்றல் 2ஆவது சுற்றுக்கு தகுதி



(யாழ்ப்பாணம்)

ஏபி விளையாட்டுக் கழகம் 3ஆவது வருடமாக நடத்தும் 50 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் போட்டியில் யாழ். சென்றல் அணி.அரியாலை சென்றல் அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 28.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் நிரோன் 15 ஓட்டங்களையும் கிருபா 91 ஓட்டங்களையும் பெற்றனர்.

சுபாதீஸ் 3 விக்கெட்டுக்களையும் கரி, மதூசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

159 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய யாழ்.சென்றல் அணி 32 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களுடன் வெற்றி இலக்கை அடைந்து போட்டியில் காலெவ் 27 ஓட்டங்களையும் மதுஸன் 40 ஓட்டங்களையும் கிரிஷாந் 11 ஓட்டங்களையும் வது ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டியில் சதீஸ் 3 விக்கெட்டுக்களையும் டிலான் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி பெற்ற யாழ்.சென்றல் அணி 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# கடந்த காலத்தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள ஐ.தே.க. தயாராகவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்திற்கு மட்டுமல்ல, கட்சிக்கும் முக்கியமான ஒரு தருணத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது என அக்கட்சியின் துணைத் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சி கடந்தகாலத் தவறுகளில் இருந்து கற்றுக் கொள்ள தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கட்சியில் இருந்து பல உறுப்பினர்கள் விலகித் தங்கள் சொந்த அரசியல் கட்சியை உருவாக்கினர், இதன் விளைவாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் பல புதிய முகங்களை அறிமுகப்படுத்தினார் எனத் தெரிவித்தார்.

புதிய முகங்களில் ஐக்கிய தேசியக் கட்சியானது தனது நம்பிக்கையை வைத்துள்ளது என்றும் இனிமேலும் குறைபாடுள்ளவர்களுடன் ஒன்றுபட பார்க்காது என்றும் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# ராஜித, சம்பிக்கவிற்கு அழைப்பாணை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 28 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தினத்தில் முன்னிலையாகுமாறு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் முன்னாள் ஷானி அபேசிங்க மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக பண்டார ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2016 இல் ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பாக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரது சாரதி திலும் துசித குமார மற்றும் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ள உதவி பொலிஸ் அத்தியட்சர் சுதத் அஸ்மடல ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் - மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9920)

றெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



## ஏலவிற்பனை

யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தில் பாவித்த உபகரணங்கள் 22.07.2020 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது.

அதிபர் (9924)



## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்







X

இம்மானுவல் ஆனல்ட்

B.A (Phil) Hons, MSS Limra International (USA)

AMTC Limra International (USA)

[முதல்வர் யாழ் மாநகரசபை, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்]

2

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ் இனத்தின் மாற்றத்திற்கான பாராளுமன்ற பிரவேசம்

(C-074)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 33 செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. லண்டனில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: லண்டன் நிரந்தர வதிவிட உரிமம் பெற்ற பெண்<br>தொ.இ: B/7220 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 33 செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: B.Com Management (Canada). Private work in Canada<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்.<br>தொ.இ: G/8549 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 53 செவ் 1 இல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அலுவலக இணைப்பாளர். (தனியார் நிறுவனம்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். சைவ போசனம் உடைய மணமகள்.<br>தொ.இ: B/7221 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 50 ¼ செவ் 3 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் கலைப்பட்டதாரி. ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உயர் தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/8553 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ..த. நிரந்தர தனியார் வேலை.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். சைவ போசனம் உடையவர் மட்டும்<br>தொ.இ: B/7226 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் MBM, B.Technology.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/8554 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: Completed Banking course, Dip.in HRM, BBM. வங்கி உதவி முகாமையாளர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். உத்தியோகம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/7230 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 22 ½ செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Sc (Agr.). Land planning officer (Gov.)<br>எதிர்பார்ப்பு:. தகுந்த வரன்.<br>தொ.இ: G/8572 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழா நேற்று சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது. (படங்கள்: தருமபுரம் செய்தியாளர்)

## மஹோற்சவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் செப்டெம்பர் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 2 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. அன்று மாலை 5 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

உற்சவங்கள் அனைத்திலும் அடியார்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

## சட்டவிரோத மரக்கடத்தல் விசேட அதிரடிப்படையால் முறியடிப்பு



(நெளுக்குளம்)

மன்னார் மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கை ஒன்று வவுனியா புளியங்குளம் விஷேட அதிரடிப் படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நேற்று காலை 6 மணியளவில் முள்ளிக்குளம் காட்டுப் பகுதியிலிருந்து சட்டவிரோத மான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அப்பகுதிக்கு சென்ற வவுனியா புளியங்குளம் விஷேட அதிரடிப்படையினர் வாகனம் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 13 முதிரை மரக்குற்றிகளை மீட்டுள்ளதுடன், அதனைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்தினையும் கைப்பற்றினர். எனினும் வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ள நிலையில் அதன் உரிமையாளர் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மீட்கப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் வாகனம் என்பன நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வவுனியா மாவட்ட வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-5-250-299)

## சனசமூக நிலையம் விசமிகளால் சேதம்



ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலையம் மீது கடந்த சனிக்கிழமை (18) இரவு இனம் தெரியாத விஷமிகளால் கல் வீச்சுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தில் சனசமூக நிலைய யன்னல் கண்ணாடிகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு-11.30 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வந்த விஷமிகளே குறித்த கல் வீச்சுத் தாக்குதலை நடாத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேற்படி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் காலை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடச்சென்ற போதும் பொலிஸார் குறித்த முறைப்பாட்டை ஏற்க மறுத்துள்ளதாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால், இரண்டு மணித்தியாலம் வரை பொலிஸ் நிலையத்தில் காத்திருந்த நிர்வாகத்தினர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## யாழில் களையிழந்த மட்பாண்ட விற்பனை



(யாழ்ப்பாணம்)

சைவ மக்களின் புனித விரதங்களில் ஒன்றான ஆடி அமாவாசை விரதம் நேற்றுத்திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வழமை போன்று இம்முறை யாழில் மண்சட்டி வியாபாரம் களைகட்டவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

யாழ்.குடாநாட்டின் முக்கிய சந்தையான திருநெல்வேலிப் பொதுச்சந்தைக்கு அண்மையில் வீதியோரமாகப் பல உள்ளூர் வியாபாரிகள் ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டுக் கடந்த நான்கு நாட்களாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும் மிகக் குறைந்தளவானோரே மண் சட்டிகளைக் கொள்வனவு செய்தனர். வருடம்தோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு திருநெல்வேலிச் சந்தையை அண்மித்த பகுதிகளில் மண் சட்டி வியாபாரம் களை கட்டுகின்ற போதும்யாழில் இம்முறை களைகட்டவில்லை. (4-5-18)

## வவுனியாவில் பலத்த காற்று வேருடன் சாய்ந்த மரங்கள்





(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று பிற்பகல் வீசிய பலத்த காற்றினால் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அந்த வகையில் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் நின்ற வேப்பமரம் ஒன்று அடியோடு சாய்ந்து வீழ்ந்துள்ளதுடன், வவுனியா ஹொறவப்பொத்தான பிரதான வீதியில் நாலாம் கட்டை பகுதியில் நின்றிருந்த மரம் ஒன்று வேரோடு சாய்ந்து வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ளது. இதன்போது குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தார்.

ஆனால் அவரது மோட்டார் சைக்கிள் சேதமடைந்துள்ளது. இதேவேளை ஹொறவப் பொத்தான வீதி றம்பைக்குளம் சந்திக்கு அண்மையில் முறிந்த மரத்தினால் அதன் கீழ் நின்றிருந்த ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் திடீரென வீசிய பலத்த காற்றினால் குறித்த மரங்கள் முறிவடைந்துள்ளன.

இதேவேளை முறிந்து வீழ்ந்த மரங்களை அவ்விடத்தில் ஒன்றுகூடிய இளைஞர்கள் உடனடியாக அகற்றினர்.

இதனால் வவுனியா ஹொறவப்பொத்தான வீதியூடான போக்குவரத்து சிலமணி நேரங்கள் தாமதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)



தேசிய மக்கள் சக்தி கட்சியின் தேர்தல் அலுவலகத்தை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் மூர் வீதியில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க வைபவ ரீதியாக திறந்து வைத்தார். (படம்: மன்னார் செய்தியாளர்)

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கே விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்று காலை 9 மணிவரை அமுலில் இருக்கும். (ஜ-4)

## விபத்தில் இராணுவ வீரர் உயிரிழப்பு

(கொழும்பு)

நுகேகொட பகுதியில் நேற்று இராணுவத்தின் கப் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் 2 இராணுவ வீரர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுகேகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


பாராளுமன்ற தேர்தல் - 2020

X 10



இதுவரை ஏமாற்றியோரை ஒதுக்கி வைப்போம்
இனி ஒரு புதுச் சரித்திரம் படைப்போம்

(C-075)

வேலாயுதம் கணேஸ்வரன்
(யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்)

ஐக்கிய மக்கள் சக்தி (SJB)


# பல்கலைக்கழக மாணவர்களை பயன்படுத்தும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்

(கொழும்பு)

**போதைப் பொருள் கடத்தல்காரர்கள் பல்கலைக்கழக மாணவர்களைப் பயன்படுத்தித் தங்களது பணத்தை, ஈசிகாஸ் முறையினூடாக பரிமாற்றம் செய்து வருவதாகத் தெரிவித்த மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் எவரேனும் இருந்தால் அது தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.**

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களின் சொத்துகளை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் அதற்கு அச்சம் கொண்டுள்ள இந்த கடத்தல்காரர்கள் மிக சூட்சுமமான முறையில் ஈசிகாஸ் முறையூடாக தங்களது பணத்தைப் பரிமாற்றம் செய்து வருவதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்குப் பல்கலைக்கழக மாணவர்களை இவர்கள் பயன்படுத்தி வருவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்பு தேடிச் செல்லும் மாணவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு தொழிலைப் பெற்றுக் கொடுப்பதாக குறிப்பிட்டு, அவர்களை தனியார் வங்கியொன்றில் கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு தெரிவித்து விட்டு, தாங்கள் அந்த கணக்கிற்கு பணத்தை வைப்பிலிடுவதாகவும் பின்னர் அந்தப் பணத்தை பல்கலைக்கழக மாணவர்களை மீள எடுத்து ஈசிகாஸ் முறைமூலம் தங்களுக்கு அனுப்புமாறு குறிப்பிட்டு, இதனைச் செய்யும் மாணவர்களுக்கு சிறியளவிலான ஊதியத்தையும் வழங்கி வருகின்றனர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட பல பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தங்களை அறியாமலே இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதுடன், இனியும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான நிலையில் இந்த மாணவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு அரச தொழில் வாய்ப்புகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் என மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## வெலிக்கடை சிறையிலிருந்து 29 தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, "Y" பிரிவிலிருந்து 29 தொலைபேசிகள், 170 பற்றரிகள் மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகள் புலனாய்வுப் பிரிவால் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமான துஷார உபுல்தெனிய பதவியேற்று ஒரு மாத காலப்பகுதிக்குள் சிறைச்சாலைகளிலிருந்து ஆயிரத்து 135 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளனவென சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

## 53 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6,052 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

முத்தரப்பு படைகளால் பராமரிக்கப்பட்டு வரும் 53 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6 ஆயிரத்து 52 நபர்கள் இன்னும் தனிமைப்படுத்தலில் உள்ளனர். கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையங்களிலிருந்து. இதுவரை 24 ஆயிரத்து 203 பேர் கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்து வெளியேறியுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்த மேலும் 6 நபர்கள் நேற்று கற்பிட்டி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனிடையே 10 பேர் கட்டாரிலிருந்து நேற்று நாடு திரும்பியுள்ளதுடன், அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஜ-4)

## கடல் அட்டைகளுடன் ஒருவர் கைதானார்

(சிலாவத்துறை)

ஒரு தொகைக் கடல் அட்டைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சிலாவத்துறை, அரிப்பு கடற்கரைப் பகுதியில் கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் மூலம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 38 வயதான குறித்த சந்தேகநபரிடம் இருந்து சுமார் 118 கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், குறித்த சந்தேகநபரையும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளையும் நீரியல்வளத் துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (ஜ-4)

## மகிந்தவின் கூட்டத்தில் இரு குழுவினர் மோதல்

### ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் இரு குழுவினருக்கு இடையில் மோதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

வெல்லவாய- செவனகல பகுதியில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த கூட்டத்தில், ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் வெல்லவாய அமைப்பாளர் உரையாற்ற ஆரம்பித்த வேளையிலேயே இந்த மோதல் இடம் பெற்றுள்ளது. இதன்போது அமைப்பாளரின் மகன் உட்பட பலர் தாக்கப்பட்டுள்ளனர்.

அப்போது கூட்டத்திற்கு வருகை தந்திருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஆதரவாளர்களை பொறுமையுடன் செயற்படுமாறு வலியுறுத்தியதுடன், பொதுஜனபெரமுனவின் ஆதரவாளர்கள் தங்கள் மத்தியில் மோதிக்கொள்ளக்கூடாது ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதனால் வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கு வெளியே ஒரே இடத்தில் வாக்களிப்பு நிலையங்கள் பலவற்றினை நிறுவவும் தற்காலிகக் கொட்டில்களில் சில வாக்களிப்பு நிலையங்களை நிறுவவும் வேண்டிவந்தது.

இவ்விடங்களில் பெரும்பாலும் பல வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டமையினால் அவை "கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்" என பெயரிடப்பட்டன. இத் தேர்தலின் போது வட மாகாணத்தில் பயன்படுத்தப்பட்ட அத்தகைய கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் பின்வருவனவாகும்.

| "கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்" |
|---|
| யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் |
| வாக்கெடுப்புப் பிரிவு - காங்கேசன்துறை |
| • புனருத்தாபன நிலையம் ,தெல்லிப்பளை |
| • மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் |
| வாக்கெடுப்புப் பிரிவு - பருத்தித்துறை |
| • தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் |

| "கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்" |
|---|
| வன்னி தேர்தல் மாவட்டம் |
| வாக்கெடுப்புப் பிரிவு - மன்னார் |
| • நானாட்டான் மகா வித்தியாலயம் |
| • மடுவீதி சந்தியின் தற்காலிக்கொட்டில் |
| • உயிலங்குளம் சந்தியின் தற்காலிக்கொட்டில் |
| வாக்கெடுப்புப் பிரிவு - வவுனியா |
| • வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் |
| • தாண்டிக்குளம் பிறமண்டு மகா வித்தியாலயம் |

### வாக்கெடுப்பு வறிதாக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் 2000

1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற திருத்தச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தமொன்றினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட 48அ பிரிவுக்கு அமைய மூன்று விடயங்கள் காரணமாக வாக்களிப்பு நிலையங்களின் பணிகளுக்கு தடங்கல் ஏற்பட்டதாக உறுதிப்படுத்தப்படுமிடத்து அவற்றின் வாக்கெடுப்பினை வறிதாக்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் கிடைக்கின்றது.

அதாவது உரிய காலத்தில் காரணமாக வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியாமல் போகின்றமை, வாக்களிப்புப் பணிகளை நிறைவு செய்ய வேண்டிய நேரம் வரை அப்பணிகளை நடத்திச்செல்ல முடியாமல் போகின்றமை மற்றும் வாக்களிப்பு நிலையமொன்றில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையத்திற்கு அலுவலர்களால் கையளிக்க முடியாமல் போகின்றமை, ஆகிய நிகழ்வுகளிலொன்றோ அல்லது பலவோ நிகழுமிடத்து அத்தகைய வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பை வறிதாக்க முடியும்.

இத்தேர்தலின் போது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சி வாக்கெடுப்புப் பிரிவின் 45 வாக்களிப்பு நிலையங்களிலும் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவின் 49 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பை நடத்த முடியாமற்போயுள்ளது.

இதற்குக் காரணம் வாக்களிப்பு நிலையங்களின் பணிகளுக்காக முப்படையினரின் .அல்லது பொலிஸாரின் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை அப்பிரதேசங்களில் காணப்பட்டமையால் வாக்களிப்பு நிலையங்கள் அனைத்தினதும் வாக்களிப்பு தேர்தல்கள் ஆணையாளரினால் வறிதாக்கப்பட்டது.

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் 2000

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) போட்டியிட்டு 4 இடங்களை வென்றது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) போட்டியிட்டு 3 இடங்களை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலா ஒரு இடத்தை வென்றன.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (EROS / PLOTE). மக்கள் விடுதலை முன்னணி. முஸ்லிம் தேசிய ஐக்கியக் கூட்டமைப்பு. தேசிய இடதுசாரி முன்னணி, பிரஜைகள் முன்னணி. சிங்கள பாரம்பரியக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி. றுகுணு மக்கள் கட்சி, சிங்களயே மகாசம்மதா பூமிபுத்ரா பக்ஷயா, லிபரல் கட்சி மற்றும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. ஆனால் அவற்றால் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியவில்லை.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட 2000ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-21 மற்றும் 22இல் காட்டப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகளை பழைய தேர்தல் முறையில் பார்க்கும் போது 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளில் 6 தொகுதிகளில் (யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) உம் 4 தொகுதியில் (காங்கேசன்துறை, உடுப்பிட்டி, சாவகச்சேரி, நல்லூர்) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) உம் வெற்றிபெற்றன.

அட்டவணை 21- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2000
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

| தொகுதி | EPDP | TULF | UNP | தமிழ் காங்கிரஸ் | அளிக்கப்பட்ட வாக்குகள் | பதியப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|---|---|---|
| சாவகச்சேரி | 1,256 | 1,284 | 913 | 658 | 6,684 | 53,933 |
| யாழ்ப்பாணம் | 1,571 | 1,277 | 581 | 394 | 5,712 | 53,666 |
| காங்கேசன்துறை | 4,068 | 4,963 | 524 | 331 | 12,295 | 63,000 |
| ஊர்காவற்றுறை | 12,311 | 1,327 | 820 | 166 | 16,332 | 51,007 |
| கிளிநொச்சி | 216 | 119 | 278 | 43 | 1.014 | 57,543 |
| கோப்பாய் | 5,044 | 4,240 | 1,051 | 891 | 16,722 | 59,419 |
| மானிப்பாய் | 5,737 | 5,703 | 955 | 1,160 | 19,027 | 62,692 |
| நல்லூர் | 2,560 | 3,587 | 1,523 | 1,262 | 11,238 | 65,203 |
| பருத்தித்துறை | 1,862 | 1,540 | 978 | 2,493 | 9,193 | 42,781 |
| உடுப்பிட்டி | 1,662 | 4,180 | 1,046 | 2,024 | 12.265 | 53,668 |
| வட்டுக்கோட்டை | 4.869 | 4.035 | 2,153 | 908 | 16,401 | 59,419 |
| தபால் வாக்குகள் | 380 | 518 | 74 | 288 | | |
| இடம்பெயரவு வாக்கு | 135 | 91 | 535 | 30 | - | |
| மொத்த வாக்குகள் | 41,671 | 32,852 | 11,431 | 10,648 | 132,733 | 662,331 |
| சதவீதம் | 35.00% | 27.59% | 9.60% | 8.94% | - | |
| ஆசனங்கள் | 4 | 3 | 1 | 1 | | |

அட்டவணை 22- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2000
யாழ்- தேர்தல் மாவட்டம் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள்

| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| டக்லஸ் தேவானந்தா | EPDP | 7,658 |
| நடராசா மதனராஜா | EPDP | 4,673 |
| கா. வே. குகேந்திரன் | EPDP | 4,244 |
| கந்தையா சங்கரன் | EPDP | 2,902 |
| வீ. ஆனந்தசங்கரி | TULF | 12,888 |
| மாவை சேனாதிராஜா | TULF | 10,965 |
| சின்னத்தம்பி சிவமகாராஜா | TULF | 7,187 |
| தி.மகேஸ்வரன் | UNP | 4,807 |
| அப்பாத்துரை விநாயகமூர்த்தி | TC | 3,825 |
| TC- தமிழ் காங்கிரஸ் | | |

### வன்னித் தேர்தல் மாவட்டம் 2000

வன்னித் தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களாகும். வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) 3 இடங்களை வென்றது. தேசிய ஐக்கிய முன்னணி (இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்) 1 இடத்தை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சி 1 இடத்தை வென்றது. மக்கள் கூட்டணி (PA) 1 இடத்தை வென்றது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (EROS / PLOTE), தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP). பிரஜைகள் முன்னணி, சிங்கள பாரம்பரியக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லிபரல் கட்சி, றுகுணு மக்கள் கட்சி, தேசிய ஒற்றுமை முன்னணி மற்றும் 7 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. ஆனால் அவற்றால் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியவில்லை.

வன்னித் தேர்தல் மாவட்ட 2000 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-23 மற்றும் 24இல் காட்டப்பட்டுள்ளன.

(தொடரும்)

# இனவிடுதலைக்காக தமிழர்கள் இணையக் கூடாது என்பதில் அரசு உறுதி

## சிறீதரன் சாடல்



(பரந்தன்)

தமிழர்கள் இனவிடுதலைக்காக சேர்ந்து பயணிக்கக் கூடாது என்பதில் அரசாங்கம் கவனமாக உள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

1958 ஆம் ஆண்டில் அல்லைக் கந்தளாயிலே முதன் முதலில் 156 விவசாயிகள் சிங்கள பொலிஸார் பார்த்திருக்க வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள். அதே ஆண்டுகளில் தான் அநுராதபுரம் பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்த எங்கள் மக்களும் திருகோணமலையில் பெரும்பான்மையாக வாழ்ந்த எங்கள் மக்களும் மலையக பகுதியில் வாழ்ந்த எங்கள் மக்கள் இனம் என்பதனை மையமாக வைத்து பலிஎடுக்கப்பட்டார்கள். இவ்வாறு எல்லாம் கடந்து வந்த இனப் படுகொலைகளைத் தாண்டி நாங்கள் எங்களுடைய ஈழ தேசத்திலே குடியேறி நில அடையாளங்களோடு எங்களை நாங்கள் அடையாளப்படுத்திக் கொண்டோம். அடையாளப்படுத்தி வாழுகின்ற காலத்தில் தான் ஒரு பெரும் தலைவர் பிரபாகரனுக்கு கீழே ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். தந்தை செல்வாவின் வழிகாட்டலிலே அறவழிப் போராட்டங்களைத் தொடர்ந்து ஒரு ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவம் இந்த மண்ணிலே முதன்மை பெற்றிருந்தது. அதற்காக பல ஆயிரக்கணக்கானவர்களை இந்த மண்ணிலே விதைத்திருக்கின்றோம். பல இலட்சக் கணக்கான மக்களை இழந்திருக்கின்றோம். கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இவற்றை எல்லாம் இழந்து தான் இந்த மண்ணிலே ஒரு தேர்தல் மூலமாக அடுத்த வாழ்வைப் பற்றி சிந்திக்கின்றோம். இந்தக் காலத்திலே எங்களை இழந்து போனால் அல்லது நாங்கள் தமிழினம் என்பதனை சொல்ல மறந்து போனால் எமது வாழ்க்கையும் இல்லாமல் போகும்.

33 கட்சிகள் இருக்கின்றன. பல நூற்றுக் கணக்கானவர்கள் இங்கு போட்டியிடுகிறார்கள். காரணம் இலங்கையில் இருக்கின்ற அரசியல் எங்களை கொஞ்சம் கொஞ்சமாக கூறுபோட்டு எங்களிடம் இருக்கின்ற அரசியல் பலத்தை எங்களிடம் அடிப்படையாக உள்ள கொள்கையை சிதைப்பதற்கான முழு முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

அந்த முயற்சிகளில் இருந்து விடுபட வேண்டுமா? அல்லது நாங்கள் எங்களுடைய வாக்குகளை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு சிதறடித்து யாரும் இல்லாத இனமாக அழிந்து போகப் போகின்றோமா?

ஆறு தடவைகள் விசாரணைகளுக்காக நான்காம் மாடி சென்று வந்திருக்கின்றேன். தமிழ்த் தேசியத்தின் கீழ் நீங்கள் யாரும் ஒன்றாக இணையக் கூடாது.

தமிழர்கள் சேர்ந்து இன விடுதலைக்காக பயணிக்கக் கூடாது என்பதில் சிங்கள அரசாங்கம் மிகவும் கவனமாக உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-2-312)

## ஆசனங்கள் பகிரப்படுவது தமிழர்களின்அரசியல் நிலைப்பாட்டை பாதிக்கும்

### சுமந்திரன் சுட்டிக்காட்டு



(குப்பிழான்)

தமிழ் மக்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கும் பிரதிநிதிகள் வட- கிழக்கிலிருந்து ஒரே அணியாகச் செல்வது மிகவும் அத்தியாவசியமானது.

ஆசனங்கள் பகிரப்படுவதால் அது தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வெகுவாகப் பாதிக்கும். வெகுவாகப் பலவீனப்படுத்தும் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த சனிக்கிழமை யாழ்.மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சுமந்திரனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்துள்ளது. இவ்வாறு ஆட்சிக்கு வந்துள்ள தரப்பு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஆட்சியைக் கைப்பற்றத் துடித்துக் கொண்டிருக்கிறது. 19 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமென்பதுடன் 13 ஆவது திருத்தத்தையும் நீக்க வேண்டுமென்ற பக்க கோஷத்துடன் மக்களிடம் ஆணை கேட்கிறார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்களுடைய அபிலாசைகளை முன்னிறுத்தி வடக்கிலும், கிழக்கிலுமிருந்து 20 ஆசனங்களைக் கைப்பற்றக் கூடிய பலமானதொரு அணியாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே காணப்படுகிறது.

இதனை எங்கள் மக்கள் கருத்தில் கொண்டு தங்களுடைய பலம் சிதைந்து விடாதவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஒருங்கிணைந்து வாக்களிக்க வேண்டும்.

நாங்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள அரசியல் சூழ்நிலை மிகவும் அபாயமானதும் சவால் நிறைந்ததுமானதொரு அரசியல் சூழ்நிலை. அந்த சூழ்நிலைக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டுமானால் நாமனைவரும் ஒரே அணியாகப் பாராளுமன்றம் செல்வதே பொருத்தமானது என சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (ஜ-2-18)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய பாதுகாப்பு சாதனங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் நேற்று விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஆறு பெரிய எக்ஸ்ரே இயந்திரங்கள், வெப்ப உணர்திறன் வெப்பமானிகள் மற்றும் பல சாதனங்கள் இவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 62 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்கள் ஊடாக விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டும் மின்னணு சாதனங்கள், வெடி பொருட்கள், வெளிநாட்டு நாணயம், தங்கம் மற்றும் பல்வேறு போதைப் பொருட்களை துல்லியமாக அடையாளம்காண முடியும்(ஜ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி.சிவக்கொழுந்து நடராஜா

(ஓய்வுநிலை ஆசிரியர்,CCTM பாடசாலை, நீர்வேலி)



*துன்னாலை தெற்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும், கரந்தன் வீதி நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவக்கொழுந்து நடராஜா (20.07.2020) நேற்று திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் மாணிக்கம் நடராஜா (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி, பார்வதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திருமதி.கோமதி குகதாஸ் (ஓய்வுநிலை ஆசிரியர், சாதனா பாடசாலை, நல்லூர்) அன்புத் தாயாரும், திரு.ச.குகதாஸ் (பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சு, வடமாகாணம்) மாமியாரும், சரண்யா (2 ஆம் வருட மாணவி, மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), சாருஜன் (2018 A/L, யாழ்.இந்துக் கல்லூரி), தாரங்கா (தரம் 11, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் கரந்தன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் 21.07.2020 இன்று செவ்வாய்க்கிழமை 8 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

3364

கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு. தகவல்: குடும்பத்தினர்.



# பாரதம்



# காசிம் சுலைமானி கொலை வி
# உளவு பார்த்தவருக்கு மரணதண்டனை நிறை

(டெஹ்ரான்)

**ஈரான் முக்கிய இராணுவத் தலைவரான காசிம் சுலைமானி கொல்லப்பட்டதில், அமெரிக்காவுக்கு உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.**

அமெரிக்கப்படை ஈராக் எல்லையில் ஈரானின் முக் கிய இராணுவத் தலைவர் களில் ஒருவராக கருதப்பட்ட சுலை மானியை விமானத் தாக்குதல் நடத்தி கொன்றது.

இதில் மற்றும் சில முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்ட னர்.

சுலைமானி கொல்லப்படு வதற்கு முன் அவரது நடமாட் டம் குறித்து அமெரிக்காவின் சி.ஐ.ஏ.-விற்கு ஈரானைச் சேர் ந்த முகமது மௌசாமி மஜ்த்

## விவசாயப் பண்ணையில் குண்டு வெடிப்பு
## ஐந்து சிறுவர்கள் உயிரிழப்பு

(அபுஜா)

ஆபிரிக்க நாடான நைஜீ ரியாவின் வட மேற்குப் பகு தியில் உள்ள விவசாய பண் ணையில் குண்டுவெடித்து 5 சிறுவர்கள் பலியான சம் பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வட மேற் குப் பகுதியில் உள்ள காட்சினா மாகாணத்தில் யம்மாமா என்ற கிராமத்தில் விவசாய பண்ணை ஒன்று உள்ளது. அந்த கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சிலர் தங்களின் கால்நடைகளுக்கு புல் அறுப்பதற்காக பண்ணைக்கு சென்றனர்.

அப்போது சிறுவர்கள் பண் ணையில் உள்ள ஒரு மரத் துக்கு அடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு சற்றும் எதிர்பாராத வகையில் பயங் கர சத்தத்துடன் குண்டு வெடித் தது. இந்த குண்டு வெடிப்பில் சிறுவர்கள் 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்.

மேலும் 6 சிறுவர்கள் பலத்த காயமடைந்தனர். அவர்கள் மீட் கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தி யசாலைகளில் அனுமதிக்கப்பட டுள்ளனர்.

விவசாய பண்ணையில் நட ந்த இந்த குண்டு வெடிப்பு சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின் றனர். (2)

## எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த
## விமானங்களை கொள்வனவு செய்யும் இந்தியா

(டில்லி)

எல்லைப் பகுதியை வலுப்ப டுத்தும் நோக்கில் ரஃபேல் போர் விமானங்களை பாதுகாப்பு பணி யில் ஈடுபடுத்த இந்தியா திட்ட மிட்டுள்ளது.

இதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி 5 ரஃபேல் விமானங் களை இந்தியாவிற்கு கொண் டுவர திட்டமிடப்பட்டுள்ளது.


குறித்த விமானங்கள் அரி யானாவில் உள்ள அம்பாலா விமானப்படைத் தளத்திற்கு வந்தடையவுள்ளன.

ரஃபேல் விமானங்கள் வானி லிருந்து தரை இலக்குகளையும் வான் இலக்குகளையும் தாக்கும் திறன் கொண்டது. இந்தியா வர உள்ள விமானங்கள் 300 கி.மீ. தூரத்தில் தரையில் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஏவுக ணைகளைச் செலுத்தும் திறன் கொண்டதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 36 விமானங்களை கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாக 5 விமானங்கள் இந்தியா வரவுள்ளன.

சீன எல்லையை ஒட்டிய பகுதிகளில் மிராஜ் 2000, சுகோய் 30, மிக்-29 ரக போர் விமானங்களையும் அமெரிக் காவிடம் இருந்து கொள்வனவு செய்துள்ள அபாச்சி ரக ஹெலி கொப்டரையும் கொண்டு இந்திய இராணுவம் பாதுகாப்புப் பணி யில் ஈடுபட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (2)


## மர்மமான முறையில்
## இறந்த காகங்களா



(சென்னை)

கொரோனாத் தொற்று நேரத் தில் வானில் பறந்து வந்த காகங் கள் திடீரென மர்மமான முறை யில் கூட்டமாக உயிரிழந்தது மக்க ளிடையே அச்சத்தை ஏற்படுத்தி

## கொரோனா தடுப்பு மருந்து பரிசோதனை
## நேற்று முதல் இந்தியாவில் ஆரம்பம்



(டில்லி)

உலகையே அச்சுறுத்திவ ரும் கொரோனாத் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பது பெரும் சவாலான விடயமாக மாறி யுள்ளது.

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் கொரோனாவிற்கான தடுப்பு மருந்து ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வரிசையில் இந்தியா தமது கொரோனா தடுப்பு மரு ந்தை நேற்று முதல் மனிதர் களுக்கு செலுத்தி சோதனை செய்யத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் ஐதராபாத் தைச் சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம், ஐ.சி.எம்.ஆர். மற்றும் தேசிய வைரலாஜி நிறுவனம் (என்.ஐ.வி.) ஆகியவற்றுடன் இணைந்து கோவக்ஸின் என்ற கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை கடந்த மாதம் உரு வாக்கியுள்ளது.

இந்த தடுப்பு மருந்தை மனி தர்களுக்கு செலுத்தி பரிசோ தனை மேற்கொள்ள எய்ம்ஸ்நெறி முறை குழு அனுமதி வழங் கியதையடுத்து நேற்று திங் கட்கிழமை முதல், இதற்கான முதல்கட்ட பரிசோதனை நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டன. (2)

## இந்தியாவில் வெள்ளத்தில் சிக்கி 108



(டில்லி)

இந்தியாவில் அசாம் மாநிலத்தில் பெய்து வரும் கடும் மழை, வெள்ளத்தில் சிக்கி இதுவரை 9 காண்டாமிருகங்கள் உட்பட 108 விலங்குகள் உயிரிழந்துள்ளன.

கடந்த 2 வாரங்களாக அசாம்மாநிலத்தில் பெய்துவரும் வரலாறு காணாத கனமழை காரணமாக அங்குள்ள பிரம்மபுத்ரா உள்ளிட்ட 8 ஆறுகளில் ஆபத்து கட்டத்தையும் தாண்டி வெள்ள நீர் பெருக்கெடுத்துள்ளது. இதனால் அங்குள்ள ஏராளமான நகரங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன. இந்நிலையில் அங்குள்ள காசிரங்கா தேசிய வனவிலங்குகள் பூங்காவில் மழை வெள்ளத்தால் வரலாறு காணாத பாதிப்பை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வெளிநாடு




## விவகாரம் நிறைவேற்றம்

என்பவர் உளவு பார்த்து தகவல் கூறியதாக குற்றம்சாட்டப்பட்டது.

மேலும், இஸ்ரேலின் உளவுத் துறைக்கும் உளவு பார்த்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது.

இந்நிலையில் நேற்று காலை



முகமது மௌசாமிக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது. (2)



# நைஜீரிய இராணுவம் மீது கொள்ளைக்கார கும்பல் தாக்குதல்

## 23 வீரர்கள் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவின் வடமேற்கில் உள்ள ஒரு தொலைதூர கிராமத்தில் இராணுவத்தினர் மீது கொள்ளைக்கார கும்பலொன்று மேற்கொண்ட தாக்குதல் காரணமாக 23 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளன.

நைஜீரிய படையினர் கட்சினா மாநிலத்தில், ஜிபியா மாவட்ட வனப் பகுதியினூடாக நடந்து சென்று கொண்டிருந்த போதே குறித்த கும்பல் அவர்கள் மீது எதிர்பாராத துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 23 வீரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் சிலர் காணாமல்போயுள்ள நிலையில் அவர்களும் உயிரிழந்திருக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது. அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (2)



## ...பில் கூட்டாக ...ளால் அச்சம்

உள்ளது.

பெரிய காஞ்சிபுரம் ஜவஹர்லால் நேரு சந்தைப்பகுதி அருகே நேற்று முன்தினம் காகங்கள் வானில் பறந்து வந்தன. திடீரென ஒன்றன்பின் ஒன்றாக 15 காகங்கள் மயங்கி கீழே விழுந்தன.

அங்கு இருந்தவர்கள் அந்தக் காகங்களுக்கு தண்ணீர் கொடுத்தனர். சிறிது நேரத்தில் 15 காகங்களும் பரிதாபமாக இறந்தன.

இது குறித்து அங்கு இருந்தவர்கள் வனத்துறையினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்று நேரத்தில் வானில் பறந்து வந்த காகங்கள் திடீரென மர்மமான முறையில் கூட்டமாக உயிரிழந்தது அந்தப் பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. (2)

# சீன அரசைக் கண்டித்து அமெரிக்காவில் போராட்டம்



(வோஷிங்கடன்)

அமெரிக்காவில் உள்ள சீனத் தூதரகம் முன்பாக இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கர்கள் நேற்று திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனா வைரஸ், தென் சீன கடல்எல்லை, வர்த்தகப்போர் என பல்வேறு விவகாரங்களில் அமெரிக்கா-சீனா இடையே மோதல் நிலவி வருகிறது.

இதனால், சீன அரசை கண்டித்து பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கமைய இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கர்கள் நேற்று வோஷிங்டனில் உள்ள சீன தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் கொரோனா வைரஸ், அமெரிக்காவுடனான வர்த்தகபோர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்துச் சீனாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தால் சீன தூதரகம் முன்பு சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகையே உலுக்கிவருகிறது. வைரஸ் காரணமாக அதிக உயிரிழப்புகளை எதிர்கொண்ட நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்த விவகாரத்தில் சீனா மீது அமெரிக்கா கடுமையான கோபத்தில் உள்ளது. மேலும் தென் சீன கடல் பகுதியில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால் அந்த கடற்பரப்பில் அமைந்துள்ள அண்டை நாடுகள் மிகுந்த கலக்கத்தில் உள்ளன. இதற்கிடையில், தனது நட்பு நாடுகளுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக தென் சீன கடல் பரப்பில் அமெரிக்கா தனது போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாமல் லடாக் எல்லை விவகாரத்தில் இந்தியாவுடன்சீனா மோதல்போக்கை கடைப்பிடித்து வருகிறது. இந்த பிரச்சினையில் அமெரிக்கா இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## ...் 108 விலங்குகள் பரிதாபமாகப் பலி!





# விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது ஐக்கிய அரபு அமீரகம்

(அபுதாபி)

செவ்வாய்க்கிரகம் செல்லும் வரலாற்று சிறப்பு மிக்க விண்கலத்தை, ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பானிலிருந்து விண்ணுக்கு ஏவியுள்ளது.

ஹோப் என்று அழைக்கப்படும் இந்த விண்கலம் ஜப்பானின் தானேகாஷிமா விண்வெளி மையத்திலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 6:58 மணிக்கு, இந்த விண்கலம் H2-A ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

இந்த ஏவுதல் நாட்டின் மிக லட்சிய விண்வெளி திட்டத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இது செவ்வாய்க்கிரகத்தின் வானிலையை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது.

இந்த ஆய்வு அடுத்த ஏழு மாதங்களாக தொடரும். இந்த விண்கலம், 2021ஆம் ஆண்டு பெப்ரவரியில், செவ்வாய் கிரகத்தைச் சுற்றியுள்ள ஒரு நீள மான சுற்றுப்பாதையில் தன்னை இணைக்க முயற்சிக்கும்.

கடந்த வாரமே இந்த விண்கலம் ஏவப்பட திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மோசமான வானிலையால் விண்ணில் செலுத்தப்படவில்லை. (2)

# 25 பாதாள உலகக் குழுக்கள்

## மேல் மாகாணத்தில் செயற்படுகின்றன

## பொலிஸார் புதிய தகவல்

(கொழும்பு)

**மேல் மாகாணத்தில் 25 பாதாளக் குழுக்கள் இயங்குவதாக கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்த மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அவற்றுள் 20 குழுக்கள் தொடர்பான தகவல்களை கண்டறிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.**

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.



திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களை தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைய மேல் மாகாணத்தில் இவ்வாறான திட்டமிட்ட குற்றச் செயல்களில் 25 பாதாளக் குழுக்கள் ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளதுடன், இவற்றில் 20 குழுக்கள் தொடர்பில் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பாதாளக்குழுக்களில் இணைந்து செயற்படும் 388 சந்தேக நபர்கள் தொடர்பில் தகல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவர்களுள் சிலர் சிறைச் சாலைகளில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் வெளிநாடுகளிலும் , பிணையிலும் சென்றுள்ளனர்.

இவர்களாலே இந்த திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருக்கும் இந்தப் பாதாளக்குழு உறுப்பினர்களை அழைத்து வருவதற்காக விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மேல்மாகாணத்திலிருக்கும் 53 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட பாதாளக்குழு உறுப்பினர்களுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் இருக்கும் பாதாளக்குழு உறுப்பினர்கள் தங்களது திட்டங்களை மேற்கொள்வதற்காக உதவி ஒத்தாசைகளை வழங்கும் நபர்கள் மற்றும் அவர்களுக்கு தொலைபேசி , போதைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை பெற்றுக் கொடுக்கும் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சமிந்த என்ற நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தனியார் வங்கிக்கு சொந்தமான காசோலை புத்தகத்தின் ஊடாக இந்த கொடுக்கல்- வாங்கல்கள் இடம் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன் , இதன்போது கோடிக்கணக்கான பணம் பரிமாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கடத்தல்காரர்களுக்கு சொந்தமான 21 வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவர்களுக்கு சொந்தமான வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பிலும் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றை அரசுடைமையாக்கவோ அல்லது தடைசெய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

தேர்தல் சட்ட விதிகளை மீறியதாக 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 147 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 44 பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை அரச வாகனங்கள் 2 உட்பட 60 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவித்து அவரது ஆலோசனைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனநலம்!

நலம்– நலமறிய ஆவல்.அப்படி என்று கடிதங்களிலே எழுதுவது எங்களுடைய வழக்கம். உடம்பு நல்லா இருக்கா என்ற அர்த்தத்திலே தான் அப்படி எழுதுகின்றோம்.மனம் நன்றாக இருக்கா என்று யாரையும் பார்த்து நாங்கள் கேட்பதில்லை.நாங்கள் அப்படி கேட்டாலும் சந்தேகப்படுவார்கள். உடம்பு நன்றாக இருந்தால் மனமும் நன்றாக இருக்கும். உடம்பை நன்றாக வைத்திருப்பது எப்படி என்று எல்லோருக்கும் தெரியும்.

மனதை நன்றாக வைத்திருப்பது எப்படி?அது தான் இன்றைக்குத் தகவல்.முதலிலே நாங்கள் யார் என்கிறது நமக்கு நன்றாக தெரிய வேண்டும்.எங்களைப் பற்றிய அறிவு எங்களுக்கு தேவை. நம்முடைய பலம் என்ன என்கின்றது எங்களுக்குத் தெரியவேண்டும். எங்களுடைய பலவீனம் என்ன என்பதும் எங்களுக்குத் தெரிய வேண்டும்.நம்முடைய பலவீனங்களினாலே எதை எதை போக்கிக் கொள்ள முடியுமோ அதை அதைப் போக்கிக் கொள்ள வேண்டும். எங்களுடைய பலம் என்னென்னவோ அவற்றை எல்லாம் வளர்த்துக்கொள்ள வேண் டும். இரண்டாவது விடயம் என்னவென்றால் யாரையாவது பார்த்து விட்டு அவர் மாதிரி நாம் ஆகவேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. நாங்கள் நாமாகவே தான் இருக்க வேண்டுமே தவிர இன்னொ ருத்தர் மாதிரி ஆகக்கூடாது.

திறமைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். நமக்குத் தெரிந்த திறமைகள் ஒரு வகை. மற்றவர்களுக்குத் தெரிந்த திறமைகள் இன்னொரு வகை.இரண்டு பேருக்கும் தெரியாத திறமைகள் இன்னொரு வகை. இப்படி பிரித்துப் பார்த்து நம்முடைய திறமைகளைக் கண்டு பிடித்து நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்னொரு விடயம்.

அடைய முடியாத இலட்சியங்களை இலக்குகளாக வைத்துக் கொண்டு அதை அடைய வேண்டும் என்று நினைத்து கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. அது மனதை நிம்மதி இல்லாமலே செய்து விடும். நல்ல ஆட்களாக பார்த்து நட்புப் பிடிக்க வேண்டும். பிரச்சினைகளையும் போராட்டங்களையும் கண்டு பயந்து விடக் கூடாது.அதை எல்லாம் எதிர்த்து நின்று சமாளிக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஜெயித்துவிட்டால் துள்ளுவதும் தவறு. தோற்றுப்போனால் துவண்டு போவதும் தவறு. நீங்கள் எந்த உத்தியோகத்தில் இருக்கின்றீர்களோ அல்லது எந்தத் தொழிலைச்செய்கின்றீர்களோ அது சம்பந்தப்பட்ட திறமைகளை நன்றாக வளர்த்துக்கொள்ள வேண்டும். சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி எங்களை மாற்றிக் கொள்வதற்கு கற்றுக் கொள்ளவேண்டும். இவ்ற்றை எல்லாம் பழக்கத்திலே கொண்டு வந்து விட்டால் மனம் எப்போதும் தெளிவாக இருக்கும். உணர்ச்சிகளை மறைத்து வைக்கின்றது, மனப் போராட்டங்களை அடக்கி வைக்கின்றது. இவை எல்லாம் மனநலத்தைப் பாதிக்கக்கூடிய விடயங்கள்.

அதனாலே மனதிற்கு சுகமான ஒரு நண்பரைத் தேடிக் கொள்வது நல்லது. அவர்களிடையே உங்கள் மனச் சுமையைச் சொல்லுங்கள் அப்படிச் சொன்னாலே உங்கள் சுமை குறையும்.


இப்படி எல்லாம் நிபுணர்கள் நமக்கு நிறைய யோசனை சொல்கின்றார்கள். அதனாலே மனதையும் உடம்பையும் நன்றாக வைத்துக்கொண்டால் வாழ்க்கை நமக்கு உற்சாகமாக இருக்கும். இல்லை என்றால் அது உபத்திரமாகத்தான் இருக்கும்.மனதிற்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக்கொள்வது நல்லது என்று சொன்னோம் –இல்லையா?

அது மாதிரி ஒருத்தர் கிடைப்பாரா? என்று நம்முடைய ஆள் ஒருத்தர் தேடிக்கொண்டு இருந்தார். ஒருத்தர் கிடைத்தார்.அவரிடம் இவர் மனதில் உள்ள கஷ்டத்தைச் சொன்னார்.சேர் ஒருத்தனுக்கு ஒருத்தி என்கிறது நல்ல பண்பாடு அதைப்பற்றிப் புரிந்து கொள்ளாமல் போனதாலே தான் இன்றைக்கு நான் கஷ்டப்படுகின்றேன். எனக்கு இரண்டு மனைவி சேர். மனம் சரியாகவே இல்லை ....ஏன் சேர் இரண்டு மனைவி கூட சந்தோசமாக குடும்பம் நடத்துவது எப்படி?கொஞ்சம் சொல்லுங்கள் என்றார். "அது எப்படி என்று எனக்குத் தெரியாது" என்றார் அவர். "ஏன் " என்று கேட்டார் இவர். "எனக்கு மூன்று மனைவியாச்சே" அப்படி என்றார் அவர்.

# சர்வதேசத்தின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து

# வடக்கு-கிழக்கில் இராணுவமயமாக்கலை அதிகரிக்கிறது அரசு

## கிளிநொச்சியில் சி.வி.விக்னேஸ்வரன் முழக்கம்



(கிளிநொச்சி)

இன அழிப்பு என்பது தமிழ் மக்களை கொல்வது மட்டுமல்ல, அதில் பல்வேறு பரிமாணங்கள் உண்டு. நாம் அறியாத பலவித இன அழிப்புக்கள் வடக்கு-கிழக்கில் தற்போது வரை அரங்கேறிக்கொண்டே உள்ளன.

தமிழ் மக்களுக்கு இராணுவம் நன்மை செய்வதாகப் பாசாங்கு காட்டுவது ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தவே. அதற்காகவே அவர்கள் வன்னி மண்ணில் நிலை பெற்றுள்ளனர் என கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி கிளிநொச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கியது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே எமது இரு மாவட்டங்களும் இந்தத் தேர்தலில் ஒருமித்தே பயணம் செய்கின்றோம்.

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். ஆகவே மிக விரிவான புலத்தையும் பரந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் உள்ளடக்கியே அவர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே தகுந்த வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது உங்கள் கடப்பாடாக அமைகின்றது. ஆகவே தான் மக்கள் மீது அன்பும் கரிசனையும் கொண்டவர்கள், ஊழலற்ற வெளிப்படையான செயற்பாடுகளை வெளிக்காட்டுபவர்கள், மக்கள் யாவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து மனிதாபிமான சேவை ஆற்றக் கூடிய மனோபாவம் உடையவர்கள் என்று சகலவிதமான நற்குணாதிசயங்களையும் கொண்ட பிரதிநிதிகளையே நீங்கள் யாவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

முன்னர் இருந்த பிரதிநிதிகள் தப்புக்கள் செய்திருந்தால் மீண்டும் அவர்களைப் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற கடப்பாடு எவையும் உங்களுக்கில்லை என்பதை மறவாதீர்கள்.

எம்மைப் போன்ற ஒரு புதிய கட்சியின் வேட்பாளர்களுக்கு இம்முறை ஒரு சந்தர்ப்பம் அளிப்பதில் தவறில்லை.

ஏற்கனவே உங்களில் பலருக்கு நாம் வடக்கு மாகாண சபையில் இருந்த போது பல சேவைகளை ஆற்றிக் கொடுத்துள்ளோம். அந்த நற்செயற்பாடுகளை நாம் உங்களுக்குத் தொடர்ந்தளிக்க உங்கள் வாக்குகள் எமக்கு மிகவும் அவசியம்.

முன்னர் உங்களை முதலமைச்சராகச் சந்தித்த நான் இப்பொழுது எமது மீன் கட்சியின் வேட்பாளராகச் சந்திக்கின்றேன்.

தேர்தல் நடைபெறுகின்ற நாளன்று முதலில் மீன் சின்னத்திற்கு வாக்களித்து அதன் பின் வாக்கட்டையின் கீழே தரப்பட்டிருக்கும் 10 இலக்கங்களில் மூன்றைத் தேர்ந்தெடுத்து வாக்களிக்க வேண்டும்.

இம்முறை எனது இலக்கம் 6. எம் கட்சியின் வேட்பாளர்கள் அனைவரதும் பெயரும் படமும் இலக்கமும் உங்கள் மத்தியில் கைத்துண்டு மூலம் நாங்கள் விநியோகித்துள்ளோம்.

அடுத்து நான் உங்கள் மத்திக்கு ஒரு சில முக்கிய விடயங்களைக் கொண்டு வர கடமைப்பட்டுள்ளேன். உங்களின் ஊடாக எமது தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்த செய்தி பரவ வேண்டும் என்று எண்ணுகின்றேன்.

அதாவது நாளுக்கு நாள் எம்மத்தியில் படையினர் தொகை அதிகரித்து வருகின்றது. எமது ஜனாதிபதி ஒரு முன்னைய இராணுவ வீரர். எனவே வருங்காலம் எப்படி அமையும் என்பதில் பலத்த கரிசனை பலர் மத்தியில் இப்பொழுது எழுந்துள்ளது.

இம்முறை நடத்தவிருக்கும் தேர்தல் சரியாக, முறையாக, ஜனநாயக முறைப்படி நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. காரணம் கொரோனாவைச் சாட்டி இராணுவ பிரசன்னம் தற்போது அளவுக்கதிகமாக வடமாகாணத்தில் ஏற்பட வழி அமைத்திருப்பதேயாகும்.

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட போர் சார்ந்த சமநிலை என்ற சர்வதேச போர் முறைத் திறன் ஆராய்வு நிறுவனத்தின் அறிக்கைப்படி இலங்கையானது 2,55,000 செயலூக்க அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது என்றும் அதே காலகட்டத்தில் பிரித்தானியா 1,46,390 அங்கத்தவரையும் இஸ்ரேல் 1,68,550 அங்கத்தவரையும் பிரான்ஸ் 2,03,910 அங்கத்தவரையும் சவுதி அரேபியா 2,27,000 செயலூக்க அங்கத்தவர்களையும் கொண்டிருந்தன என்றும் கூறுப்பட்டுள்ளது.

எனவே எமது சிறிய நாடு எந்தளவுக்கு படை பலம் பெற்றுள்ளது என்று காணக் கூடியதாக உள்ளது.

கொள்கை ஆராய்வு நிறுவனமான யாழ்ப்பாணத்தின் அடையாளம் என்ற நிறுவனம் 2017 ஒக்டோபர் மாதத்தில் முல்லைத்தீவில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவ வீரர்களின் தொகை 60,000. இது முல்லைத்தீவில் 2 சாதாரண மக்களுக்கு ஒரு படை வீரர் என்ற விகிதத்தில் அமைகின்றது.

உலகத்தில் வெகுவாக இராணுவமயப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் முல்லைத்தீவும் ஒன்று என யாழ்ப்பாணத்தின் அடையாளம் என்ற நிறுவனத்தின் ஆய்வு கூறுகிறது.

கனடாவில் இருந்து வருகை தந்த John Tory என்ற நகரபிதா என்னுடன் முள்ளிவாய்க்கால் நோக்கிப் பயணம் செய்து வந்த போது முல்லைத்தீவில் காணுமிடமெல்லாம் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளதைப் பார்த்து இங்கு யுத்தம் முடிவடையவில்லையா? என்று கேட்டார்.

அப்போது போரின் பின் 9 வருடங்கள் கழிந்த நிலையில் ஏன் இவ்வளவு படைமுகாம்கள் என்ற கேள்வியை அவர் முன்வைத்தார். அந்த நிலை மாறவில்லை. மாறாக இன்னமும் விரிவடைந்து வருவதை நாம் இன்று பார்க்கின்றோம்.

உண்மையில் 60,000 போர் வீரர்கள் அக்காலகட்டத்தில் முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்தார்கள் என்று கூறினாலும் இத்தொகை இராணுவப் பிரசன்னத் தொகையே என்றும் இலங்கை கடற்படை, ஆகாயப்படையினர் பற்றிய தக்க தகவல்கள் கிடையாமையால் படையினர் தொகை 60,000 ஐயும் மிஞ்சியிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போர் இல்லாத ஒரு பிரதேசத்தில் இந்தளவு படையினர் பிரசன்னத்திற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

பல சர்வதேச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் போன்றவை இலங்கையில் போரின் பின்னர் படைக் குறைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்ட பின்னரும் இலங்கை செவிசாய்க்காது இருப்பது ஏன்?

இவ்வாறான செயல்கள் மூலம் தமிழ் மக்களின் கோபத்தைத் தூண்டிவிட்டு அவர்களை எதிர்வினையில் ஈடுபட வைத்து அதைச் சாட்டாக வைத்து தமிழர்களை நிர்மூலமாக்கும் திட்டம் எதுவும் உள்ளதா? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

எவ்வளவு தான் படையினர் உங்களுக்கு நன்மைகள் செய்வதாகப் பாசாங்கு காட்டினாலும் அவர்கள் ஒரு அடிப்படைத் திட்டத்தின் அடிப்படையிலேயே வன்னியில் நிலைபெற்றுள்ளார்கள் என்பதை நாம் மறத்தல் ஆகாது.

பல இளம் சகோதர, சகோதரிகள் வறுமையின் நிமித்தம் இவர்களின் பிடிக்குள் அகப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்களே தெரிந்து கொள்ளாதிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு மாற்று வாழ்வாதாரத்தை நாம் வழங்க முன்வர வேண்டும்.

இதுபற்றி கூட்டமைப்பினர் எந்தவித கரிசனையையும் இதுவரை காட்டாதது மனதுக்கு வருத்தமாக உள்ளது. இன அழிப்பு என்பது தமிழ் மக்களைக் கொல்வது மட்டும் அல்ல.

கலாசார இனவழிப்பு, கல்விசார் இன அழிப்பு, பொருளாதார இன அழிப்பு, கட்டமைப்புக்களின் இன அழிப்பென்று பல இன அழிப்புக்கள் உண்டு. இவ்வாறான பலவித இன அழிப்பு நடவடிக்கைகள் வட கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதை அறிஞர்கள் பலர் வெளிக்காட்டியுள்ளார்கள்.

எம்மைக் கண்காணிக்கும் படையினரில் 99 சதவிகிதமானவர்கள் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எம்முடன் பழகும் பொலிஸாரில் 95 சதவிகிதமானவர்கள் அதே பெரும்பான்மையினர்.

இதன் அர்த்தமென்ன? பெரும்பான்மையினருக்கு எம்மிடையே எதையும் நிகழ்த்த, எதையும் செய்ய, எதைச் செய்தாலும் அதற்கான பொறுப்புக் கூறலில் இருந்து அவர்களை விடுபடச் செய்ய சட்டப்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே நாடெங்கும் இராணுவ சர்வாதிகாரம் வரப் போகின்றதென்று பெரும்பான்மையினர் அச்சம் கொண்டுள்ள நேரத்தில் வடக்குக் கிழக்கில் அது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது என்பதே உண்மை. பலருக்கு இது விளங்கவில்லை.

இராணுவ சர்வாதிகாரம் வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தப்படப்போவது மற்றைய மாகாணங்களில் ஏற்படுத்தப் போகும் அதே காரணங்களுக்கு அன்று. மற்றைய ஏழு மாகாணங்களிலும் நிர்வாக சீர் திருத்தத்துக்காகவும் ஊழலை ஒழிக்கவும் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பௌத்த சமய வலுவாக்கலுக்காகவும் சர்வாதிகாரம் பயன்படுத்தப்படலாம்.

ஆனால் வடக்கு-கிழக்கில் பின்வரும் காரணங்களுக்காகவே சர்வாதிகாரம் பயன்படுத்தப்படலாம் என்று கொள்ள இடமிருக்கின்றது.

1.தமிழர் காணிகளைக் கபளீகரம் செய்வதற்கு.

2.அந்தக் காணிகளில் சிங்களமயமாக்கலை நடைமுறைப்படுத்துவதற்கு.

3.ஆனால் அந்த சிங்களமயமாக்குதலுக்கு பாவிக்கப் போகும் அவர்களின் யுக்தி பௌத்த மயமாக்கலாகும். தமிழரின் பௌத்த காலத்து தொல்லியல் எச்சங்களை பௌத்த சிங்கள எச்சங்களாகக் காட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண ஜனாதிபதி செயலணி அதற்காகவே நியமிக்கப்பட்டுளது.

இவ்வாறு செய்தால் என்ன நடக்கும்?

1.பிற நாடுகளுக்குத் தமிழர்கள் வெளியேறிச் செல்லலாம். அல்லது நரட்டின் மற்றைய பிரதேசங்களுக்குச் சென்று குடியேறலாம்.

2.தொடர்ந்திருந்து இராணுவ ஆட்சியின் கீழ் 2 ஆம் தர 3 ஆம் தர பிரஜைகளாக வாழலாம்.

3.எதிர்த்து சிறைகளில் அடைபடலாம் அல்லது தடை முகாம்களில் காலத்தை கழிக்கலாம் அல்லது.

4.முரண்டு பிடித்து சுட்டுக் கொல்லப்படலாம்.

இவை யாவையும் இனப்படுகொலையின் முக்கிய குணாம்சங்கள். ஒரு பிரதேசம் வாழ் மக்களை அங்கிருந்து பலாத்காரமாக அல்லது சூழ்ச்சியின் துணை கொண்டு அப்புறப்படுத்துவது இனப்படுகொலையின் அம்சமாகும்.

இதற்கு என்ன செய்யலாம்? எமது கட்சி இவை யாவற்றையும் உணர்ந்தே அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. எமக்கு மக்களின் அனுசரணையும் ஆதரவும் கிடைத்தால் எமக்கு அதிகாரம் தானாகவே கிடைக்கும்.

அந்த அதிகாரம் எம்மை எம் மக்களின் ஈடேற்றத்திற்கு உழைக்க உதவும். அந்த அதிகாரம் எம்மை பிறநாட்டு அலுவலர்களுடன் எம் மக்கள் சார்பில் கலந்துறவாட வழிவகுக்கும்.

அந்த அதிகாரம் எமக்கு எதிராகச் செயற்படும் சக்திகளுக்கு எதிராகத் துணிந்து நிற்க உதவிபுரியும். அந்த அதிகாரம் எமது நாட்டுக்குக் கொடைகள் வழங்கும். கொடையாள நாடுகளுடன் பேச உதவும். எனவே தான் உங்களின் ஆதரவு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தவறாமல் மீன் சின்னத்திற்குப் புள்ளடி போடுவதன் மூலம் எமக்குக் கிடைக்க வேண்டும் என நீதியரசர் மேலும் தெரிவித்தார். (2-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

27

கலாநிதி முருகர் குணசிங்கம்

இவர்களுள் பலர் இவ் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பதினாறு நாடுகளில் ஏதோவொரு நாட்டுக்குள் போவதற்கும் முயற்சிக்கலாம். ஆகவே மேற்கூறப்பட்ட நாடுகளில் சிறிய அளவாக உள்ள ஈழத்தமிழர்கள் இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இறுதியாக இந்த அத்தியாயத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முக்கியமாக மேற்படி பதினாறு நாடுகளிலும் மொத்தமாக பத்து இலட்சத்திற்கும் சற்று அதிகமான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள் என்பதனை அறிய முடிகிறது.

**சமூக நிலைமையும் சவால்களும்**

இந்த அத்தியாயத்தில் பதினாறு நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் சமூக நிலைமைகள் பற்றி ஆய்வு செய்யப்படும்.

பிறந்து வளர்ந்த தமது தாய்நாட்டில் பல்வகைக் கொடூரமான நிகழ்வுகளை எதிர்கொண்டு தாய், தந்தை, உறவினர்களிடம் இருந்து பிரிந்து மறக்க முடியாத உணர்வுகளைத் தம்முள் அடக்கிக் கொண்டு புதிய நாட்டில் முற்று முழுதான புதிய புறச்சூழலில் புதிய மனித இனங்களுடன் பல்லினக் கலாசாரச் சூழலில் மாறுபட்ட தட்வெப்பக் கால நிலைகளுக்கு முகங்கொடுத்து ஈழத்தமிழர்கள் தமது வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொண்டு இருக்கின்றனர் என்பதை ஒரு சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதே இந்த அத்தியாயத்தின் முதன்மையான நோக்கமாக உள்ளது.

ஒரு புதிய சூழலில் தமது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்ன? அவர்களின் குடும்ப சமூகக் கட்டமைப்பு எவ்வாறானது? என்றும் ஆய்வு செய்வது மிகவும் முக்கியமானது.

அத்துடன் அவர்களின் சமூக, சமய, மொழி, கலை, பண்பாட்டு பாரம்பரியங்களை எவ்விதம் பாதுகாத்துக் கொண்டனர்? அவ்வாறான விழுமியங்களை அவர்கள் தமது இளம் தலைமுறையினரிடம் கையளிக்க முடிந்ததா? இளம் தலைமுறையினர் அவற்றை ஏற்றுக் கொண்டனரா? மறுத்தனரா? என்பது போன்ற பல கேள்விகளுக்கு விடை காண வேண்டிய தேவையும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

மேலும் அவர்கள் தாய்நாட்டில் உள்ள தமது குடும்பத்தினரோடும் உறவினர்களோடும் தொடர்புகளைப் பேணிப் பாதுகாக்க முடிந்ததா? அல்லது அவற்றையெல்லாம் மறந்து வாழ்கின்றார்களா? என்பது குறித்த ஆய்வும் இடம் பெறுகின்றது.

சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் அணுகுகின்றபோது பல தரவுகளையும் புள்ளி விபரங்களையும் கொண்டு இருந்தாலும் சொந்த அனுபவங்கள், நேர்காணல்கள், சந்திப்புகள், கலந்துரையாடல்கள் உள்ளிட்ட பல வேறு ஆதாரங்களைக் கொண்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. **(Empirical Studies).**

கட்டுரை ஆசிரியர் சுமார் 30 ஆண்டுகள் ஈழத்திலும் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆய்வில் இடம்பெறுகின்ற நாடுகளுக்கெல்லாம் கல்வி கற்பதன் பொருட்டும் ஆய்வு செய்வதன் பொருட்டும் கருத்தரங்குகள், பட்டறைகள், மகாநாடுகள், விரிவுரைகள், நூல் வெளியீடுகளில் பங்கு பற்றுவதன் பொருட்டும் பல தடவைகள் சென்று ஈழத்தமிழ்ச் சமூகத்துடனும் ஏனைய பல்வேறு சமூகங்களுடனும் நெருங்கிப் பழகி அவர்களின் புலம்பெயர் நாட்டு வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்தவர் என்ற வகையில் நேரடி அனுபவங்களை இந்த ஆய்வில் பொருத்தமான இடங்களில் இழையோடச் செய்துள்ளார்.

மேலும் ஒரு நாட்டின் சமூக நிலைமை அந்த நாட்டில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை, சமய, மொழி, கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல் பற்றிய ஆழமான பார்வையை அதே நாட்டில் அதே சமூகத்தில் பிறந்து வளர்ந்து அச்சமூகத்தைப்பற்றி நன்கு அறிந்த ஒருவர் ஆய்வு செய்து எழுதுவதே மிகச்சிறந்த ஆய்வாக அமையும்.

இத்தகைய ஓர் ஆய்வில் உணர்வுகளுக்கு இடங்கொடாமல் நேர்மையுடன் அணுக வேண்டியது மிகவும் முக்கியமானது.

அத்துடன் பல்வகையான புலமை சார் ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வு நூல்களும் அவைகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் இந்த ஆய்வில் பயன்படுத்தப்படும்.

முன்னைய அத்தியாயத்தில் ஒவ்வொரு புவிசார் பிராந்தியத்தின் கீழ் உள்ள நாடுகள் தனித்தனியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த அத்தியாயத்தில் மொழி வாரியாகப் பிராந்தியங்கள் பிரிக்கப்பட்டு அவற்றுள் அடங்கும் நாடுகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தமிழ் மொழி பேசப்படுகின்ற தமிழ்நாடு தனியாகவும் ஆங்கிலமொழி பெரும்பான்மையாகப் பேசப்படுகின்ற மலேசியா, சிங்கப்பூர் தனிப்பிரிவாகவும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் ஒரு பிரிவாகவும் பிரித்தானியா, வட அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் ஒரு தனியான பிரிவினுள்ளும் ஆங்கில மொழி பெரும்பாலும் பேசப்படாத நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகள் ஒரு தனிப்பிரிவாகவும் ஆய்வு செய்வது மிகவும் பொருத்தமானதாக அமைவதால் அம்முறையே பின்பற்றப்படுகிறது.

இதற்கான அடிப்படைக் காரணம் ஒரு சமூகத்தில் மொழி அறிவு பல்வேறு கோணங்களில் பல்வேறு வழிகளில் பல்வகையான தாக்கங்களையும் விளைவுகளையும் **(Inter play)** ஏற்படுத்த வல்லது.

மனிதர்களையும் மனித இனங்களையும் அவர்கள் வாழும் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் பாலமாகவும் **(Interact)** தொடர்பாடலுக்குரிய அலைவரிசையாகவும் **(Communication & Channel)** வலுவான சக்தியாகவும் விளங்குவது மனிதனைச் சாதிக்க வைக்கும் ஆற்றலும் சக்தியும் கொண்டது மொழி அறிவு.



எனவேதான் புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தை மொழி வாரியான அடிப்படையில் அமைந்த நாடுகளுக்கு ஊடாகப் பார்ப்பதன் மூலம் அவர்களது சமூக நிலைமைகளை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

அத்தோடு புவிசார் பின்னணி தட்வெப்ப நிலைமைகளையும் கருத்திற் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. காரணம் ஒரு புவியியல் பிரதேசத்தின் சூழல் அந்நாட்டின் பருவநிலை என்பன ஒரு மனிதனையும் அந்தச் சமூகத்தையும் ஒட்டுமொத்தமாகப் பல்வேறு வழிகளில் பாதிக்கின்ற விடயங்கள் ஆகும்.

அதன் அடிப்படையிலேயே மேற்கண்ட நாடுகள் அமைந்து உள்ளன. அந்த அடிப்படைகளில் ஈழத்தமிழர்களின் சமூக நிலைமைகள் பற்றி ஆய்வு செய்யும் பொழுது பெரும்பாலும் "கூறியது கூறல்" **(Repetition)** தவிர்க்கப்படும் என்பதால் மேற்கண்ட வரிசையில் நாடுகள் பிரிக்கப்பட்டமை சிறப்பான ஆய்வுக்கும் அணுகுமுறைக்கும் இடம் கொடுக்கும்.

**ஆசிய பசுபிக் நாடுகள் இந்தியா - தமிழ்நாடு**

1983 இல் இருந்து ஒன்றரை இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழர்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வந்து அகதி முகாம்களிலும் வெளியிலும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கையறு நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

முதலில் அகதி முகாம்களில் உள்ள ஈழத்தமிழர்களைப் பற்றியும் அடுத்து முகாம்களுக்கு வெளியில் தங்கி வாழ்பவர்களைப் பற்றியும் ஆய்வு செய்யப்படுகிறது.

"தான் உண்டு தம் பாடு உண்டு" எனக் குடும்பமாகவும் கூட்டுக் குடும்பமாகவும் வாழ்ந்த அவர்களது வாழ்க்கை குருவிக் கூட்டில் கல் எறியப்பட்டது போல கறையான் புற்றுக்குள் பாம்பு குடியேறிய கதையாகச் சிதறடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

அத்தகைய பேரிழப்பையும் பேரதிர்ச்சியையும் **(Traumatic)** தாங்கிக்கொண்டு கையறு நிலையில் தமிழ்நாட்டிற்குள் அகதிகளாக வந்து சேர்ந்தனர்.

சொந்த நாட்டில் தமது சொந்த நிலத்தில் தனியான பெரிய, சிறிய வீடுகளில் காலங்காலமாக வாழ்ந்தவர்கள் கிடைக்கின்ற வருமானத்தில் மானத்துடன் வாழ்ந்தவர்கள் புலம்பெயர்ந்த மண்ணில் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க நேர்ந்தது.

தமது பிள்ளைகளுக்குத் தேவையான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே அவர்களின் முதன்மையான கடமையாக இருந்தது.

ஏனைய சார்க் (SAARC) நாடுகளைப் போல் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உடன்படிக்கையில் இந்திய அரசு கையொப்பம் இடாத போதிலும் ஈழத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொண்டது.

ஆனால் அவர்களுக்கு எத்தகைய மறுவாழ்வினை அமைத்துக் கொடுத்தது என்பதும் அவர்களின் சமூக வாழ்க்கை எவ்வாறான ஒரு சூழலில் அகப்பட்டுள்ளது என்பதும் வெளி உலகத்திற்குத் தெரியாத விடயங்கள் ஆகும்.

கடந்த முப்பது ஆண்டுகளில் பல தடவைகள் பல்வேறு அகதி முகாம்களுக்கு கட்டுரை ஆசிரியர் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு அறிந்தவர் என்ற வகையிலும் அகதிகள் பலருடன் கலந்துரையாடியவர் என்ற வகையிலும் அவர்களது வாழ்க்கை பற்றிய நிலைமைகளைச் சுருக்கமாகப் பதிவு செய்வது தேவையாகும்.

(தொடரும்)

# மக்களின் மனங்களை வென்றதாலேயே மக்களால் தெரிவு செய்யப்படுகிறேன்

## பிரதமர் மகிந்த பெருமிதம்



(மொனராகலை)

**மக்களால் வெறுக்கப்பட்ட அரசியல்வாதிகள் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு செல்ல முயற்சிக்கிறார்கள். மக்களின் மனங்களை வென்றதால், மக்களால் தொடர்ந்து தெரிவு செய்யப்படுகிறேன். ராஜபக்ஷக்கள் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவே மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு ஆணையை வழங்கியுள்ளார்கள் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மொனராகலை - மெதகம பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர்மேலும்தெரிவிக்கையில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவது எமது பிரதான இலக்கு. மக்களால் வெறுக்கப்பட்ட அரசியல்வாதிகள் தேசிய பட்டியல் ஊடாக இம்முறை பாராளுமன்றத்திற்குச் செல்ல முயற்சிக்கிறார்கள். இத்தன்மையினை இரண்டு பிரதான எதிர்க்கட்சிகளிலும் காணலாம். இக்கட்சிகள் தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மக்களுக்கு சேவையாற்றாத அரசியல்வாதிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்குவது பயனற்றது. மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுபவர் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். மக்களின் மனங்களை வென்றதால் தொடர்ந்து போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவாகுகிறேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய பிறகு மொட்டுச் சின்னத்தில் பொதுஜன பெரமுனவை உருவாக்கினோம். புதிய கட்சியுடன் ராஜபக்ஷக்களின் அரசியல் முடிவடையும் என அப்போதைய ஆளும் தரப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் மக்கள் எங்களை கைவிடவில்லை. 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசியல் ரீதியான தவறுகள் திருத்திக் கொள்ளப்பட்டன.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது. இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. தற்போது பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை தவிர்த்து ஏனைய கட்சிகளுடன் கூட்டணியமைத்து போட்டியிடவுள்ளோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதே பிரதான இலக்கு என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# ஒடிசாவில் கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை மஞ்சள் நிற ஆமை





(ஒடிசா)

ஒடிசாவின் பல்சோரி மாவட்டத்தில் அரிய வகை மஞ்சள் நிற ஆமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒடிசா மாநிலம் பல் சோரி மாவட்டம் சுஜன் பூர் கிராமத்தைச் சேர்ந்த வர் பசுதேவ் மகாபத்ரா. இவர் தனது தோட்டப் பகுதியில் நேற்று வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர் வேலை செய்து கொண்டிருந்த பகுதியில் மஞ்சள் நிறமுடைய அரியவகை ஆமை ஒன்று இருந்ததைக் கண்டுபிடித்தார். வித்தியாசமான நிறத்தில் அந்த ஆமை இருந்ததால் பசுதேவ் அதை தனது வீட்டிற்குக் கொண்டு வந்தார்.

சாதாரணமான ஆமையை விட இந்த ஆமை வித்தியாசமான நிறத்தில் இருந்ததால் அதை காண அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பசுதேவின் வீட்டில் குவிந்தனர். மேலும், அவர்கள் அந்த அதிசய ஆமையைப் பார்வையிட்டு வியந்து சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்த வனத்துறையினர் பசுதேவின் வீட்டிற்குச் சென்று மஞ்சள் நிற அதிசய ஆமையை கைப்பற்றினர். மேலும், இந்த ஆமை 'அல் பினோ' எனப்படும் அரியவகை ஆமை இனத்தை சேர்ந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர் . (2)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
அன்புக்குரிய தமிழ் உறவுகளே!
நேர்மையான - விலைபோகாத
தமிழ்த் தலைமையை உருவாக்க
உங்கள் வாக்குகளை
மீன் சின்னத்திற்கு வழங்குங்கள்.


6

X
10
நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்
தவச்செல்வம் சிற்பரன்
யாழ். இந்துவின் மைந்தன்
(Architect மொறட்டுவ பல்கலைக்கழகம்)
(C-076)

# இராசிபலன்

21.07.2020
ஆடி 06, செவ்வாய்க்கிழமை
பிரதமை முன்னிரவு 10.22 மணிவரை
பூசம் முன்னிரவு 9.58 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
சந்திராஷ்டமம் பூராடம், உத்திராடம்
ஆடிச்செவ்வாய்

வளவன்

**மேஷம்** — பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** — நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொதுவாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும், வழிபாடு குதூகலம் தரும்.

**மிதுனம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** — விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**சிம்மம்** — தொழில் நலன் கருதிய பயணமொன்று ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கன்னி** — செல்வ நிலை உயரும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், யோகமான நாள்.

**துலாம்** — தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்** — சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**தனுசு** — கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்** — சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நினைத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.


**கும்பம்** — கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** — பள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

உன்னையே நீ அடிக்கடி சோதித்துப்பார்

# மூல ஆவணங்களைக் கோரலானது இராவணனை சிங்களவனாக்கும் முயற்சியே

## சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள்



(கொழும்பு)

இராவணன் பயன்படுத்தியதாக கூறப்படும் புட்பக விமானத்தை பற்றிய மூல தகவல்கள் இருப்பின் தமக்கு வழங்குமாறு கோரி சிவில் விமான சேவைகள் அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

"இராவணன்மற்றும்விமான ஆதிபத்தியத்தில் நாம் இழந்த மரபு" என்ற தலைப்பில் ஆய்வு தொடங்கப்பட்டிருப்பதாகவும் அதற்கான மூல தகவல்களை வழங்குமாறும் கேட்டுள்ளது.

அவ்வாறு அறியத்தந்தால் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த முயற்சி இராவணனை சிங்களவனாக்கும் முயற்சியே எனவும் முக்கிய மூல தகவல்கள் இருப்பின் அவற்றை பாதுகாக்க வேண்டும். பணத்திற்காக அதனை விற்று விடக் கூடாது என சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. (ஜ-4)

# கிறிஸ்மஸ் தீவில் தடுப்புக்காவலிலுள்ள இலங்கைப் பெண் வைத்தியசாலையில்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிச் சென்ற நிலையில் கிறிஸ்மஸ் தீவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் பெண்ணான பிரியாவின் உடல்நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

இதையடுத்து பிரியா தற்போது மேற்கு அவுஸ்திரேலியாவின் பெர்த் நகர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவிலுள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சுமார் 3 வார காலமாக கடுமையாக சுகவீனமடைந்து இருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கிறிஸ்மஸ் தீவில் அவருக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கப்படவில்லை எனவும், கடுமையான போராட்டங்களின் பின்னரே அவரைச் சிகிச்சைக்காக பேர்த் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அதிகாரிகள் இணங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## வாக்காளர்கள்

# ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாய தேவைப்பாடாகும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் கட்டாய தேவைப்பாடாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று திங்கட்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் ஒரு கட்டாய தேவைப்பாடாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாக்காளர்கள் வாக்களிக்கும்போது, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# கைதிகளுக்கு மன்னிப்பு விசேட குழு நியமனம்

(கொழும்பு)

சிறைக்கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ தலைமையில் ஏழு பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 26 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 15 ஆயிரம் பேர் விளக்கமறியலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள கைதிகள் என சட்டவிவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹன தீர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சிறைச்சாலைகளுக்குள் ஏற்பட்டுள்ள நெரிசல் நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சிறு குற்றங்கள் தொடர்பில் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட விவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சுமார் ஆயிரம் கைதிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையினை கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஆராயும் விசேட குழுவிடம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கை தவறியதால் பலியானது குழந்தை

(கொழும்பு)

கையில் இருந்து தவறி விழுந்த 18 மாத குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. திருகோணமலையிலிருந்து கண்டி பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கிண்ணியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருகையில், குழந்தையின் சகோதரி தூக்கி வைத்திருந்த போது தவறுதலாக கீழே விழுந்து குழந்தை மயக்கமுற்றது.

இந்நிலையில் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டது. இதையடுத்து கண்டி போதனா வைத்தியசாலையில் குழந்தை உயிரிழந்தது. (ஜ-4)

# இ.போ.சபைக்கு நாளாந்தம் பத்து மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் சுமார் பத்து மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுப் போக்குவரத்துச் சேவையின் ஊடாக பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணத்தினால் போக்குவரத்துத்துறை வீழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 5,300 பேருந்துகள் நாளாந்தம் குறைந்த வருமானத்திலேயே சேவையில் ஈடுபடுவதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## பெரமுன மீதே அதிக குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவிற்கு எதிரான தேர்தல் வன்முறைகளே அதிகளவில் பதிவாகியுள்ளதை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2 ஆம் திகதி முதல் ஜூலை 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிவான தேர்தல் வன்முறைகள் பற்றிய விபரத்தை தேர்தல்வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.(ஜ-4)



# ஆன்மீகம்

## தடைக்கற்கள்... எடைக்கற்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி தளராமல் நடைபோடும் வேகமும் விவேகமும் தான் நமக்கு வேண்டும். மேலும் சொல்லப்போனால் நம் இலட்சியப்பாதையில் வரும் இடையூறுகள்தான் நம் மனத்துணிவை நிறுத்துப் பார்க்கும் துலாக்கோல்.

ஆம் தடைக்கற்கள் தான் இலட்சியவாதியின் கொள்கை உரம் மங்கி விட்டதா? இல்லை பொங்கி வருகிறதா? என்பதைச் சீர்தூக்கிச் சொல்லும் எடைக்கற்கள். அண்ணாமலைத் தலத்தில் அண்மையில் வாழ்ந்த ஞானி யோகிராம் சுரத்குமார் 'விசிறி சாமியார்' என்று அழைக்கப்பட்ட அவருக்கு ஏராளமான விசிறிகள். அந்த பக்தர்கள் பலரும் அவரைத் தரிசிக்க வருவதும் தங்கள் நிலை குறித்து கடிதம் எழுதுவதும் உண்டு. யோகியார்க்கு வருகிற அந்த மடல்களை எல்லாம் அவரிடம் தொண்டு செய்த அம்மையார் ஒருவர் படித்துக் காட்டிக் கொண்டிருந்தார். பலர் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட சோகச் சம்பவங்களையும் சோதனைகளையும் எழுதியிருக்க அதைப் படித்துக் காட்டிக்கொண்டிருந்த அம்மையார் அழுத படியே யோகியாரிடம் கேட்டார், 'ஏன் சுவாமி நம் அன்பர்கள் அனைவருக்கும் இப்படிப்பட்ட சோதனைகள் அடுக்கடுக்காக வருகிறது?'

அம்மையாரைப் பார்த்து விசிறி சாமியார் சொன்னார்... 'நாம் தினசரி இங்கு உள்ளே வரும் போது வெளிவாசலில் மிதியடியாகப் போட்டிருக்கும் சாக்கில் கால்களைச் சுத்தப் படுத்திவிட்டு நுழைவோம் அல்லவா? அந்தக் கோணித் துணியில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்துவிட்டு வா' என்றார்.

பக்தர்களுக்கு ஏன் பல சோதனை? என்று நாம் யோகியாரிடம் கேட்டோம். அவர் என்னடா என்றால் வாசற்படியில் உள்ள சாக்கில் எழுதியிருக்கும் வாசகத்தைப் பார்த்துவிட்டு வா என்கிறாரே. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் என்ன சம்பந்தமோ என்று எண்ணியவாறு கோணித் துணியில் உள்ள சொற்றொடரைக் கூர்ந்து கவனித்தார். 'கல், குருணை, மண் துகள்கள் நீக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட எண் - 1 திட அரிசி' என்று அதில் எழுதியிருந்ததைப் பார்த்து யோகியாரிடம் வந்து அதைச் சொன்னார் அம்மையார்.

சிரித்தபடி யோகியார் சொன்னார்... 'புரிந்துகொண்டாயா? இறைவன் பக்தர்கள் வாழ்க்கையில் ஏற்படும் துயரங்கள், சோதனைகள் மூலம் அவர்களைப் பக்குவப்படுத்தி பிற்காலத்தில் அவர்கள் வாழ்வில் ஏற்பட இருக்கும் ஒரு மகத்தான காரியத்திற்கு அல்லது முன்னேற்றத்திற்கு அவைகளை அடிக்கோலாக்கி விடுவார். சோதனைகள் கூட தெய்வத்தின் ஆசீர்வாதங்கள் தான்' திருவண்ணாமலை யோகியின் விளக்கம் ஒப்பற்ற கார்த்திகை தீப ஜோதியை ஒவ்வொருவர் உள்ளத்திலும் அல்லவா ஏற்றி வைக்கிறது.

'சுடச் சுடரும் பொன்' என்று தங்கத்திற்கு ஒரு பட்டம் தருகிறார் வள்ளுவர். கஷ்டங்கள் பல பட்டபின் தான் கனகம் ஜொலிக்கின்றது. நெருப்பில் இடுவதால்தான் தங்கம் பொன்னாரமாகப் பொலிகின்றது. சுத்தியால் தட்டுவதால்தான் தங்கக் கவசமாகி இறைவன் மேனியில் தங்குகிறது.

சிறிய துளை மூலம் கம்பியாக்குவதால்தான் 'தங்கக்கம்பி' என்ற பட்டம் பெறுகிறது. தடைக் கற்களைப் படிக்கற்கள் ஆக்குவோம். நம் திறமையை அளந்து பார்க்கும் எடைக்கற்களே அவை என்று எண்ணி மகிழ்வோம். நம் சாதனை மகுடத்தில் வைரக் கற்கள் பதிக்க வருபவையே அவை எனப் புரிந்துகொள்வோம்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## முகக்கவசம் இன்றி பயணிப்போருக்கு பிரத்தியேக வகுப்புக்கள்!

(கொழும்பு)

முகக்கவசங்கள் இன்றி பயணிப்போருக்கு பிரத்தியேக வகுப்புகளை நடத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதற்கமைய முகக்கவசங்கள் இன்றி பயணிக்கும் மற்றும் முகக்கவசங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் இருப்பவர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு விசேட மருத்துவ ஆலோசனை வகுப்புகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து முகக்கவசம் அணிவது நாட்டில் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மண்சரிவு காரணமாக பாதை தற்காலிகமாக மூடல்



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையினூடாக கொழும்புக்குள் நுழையும் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இமாடுவ மற்றும் பின்னடுவா பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக குறித்த பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 400 | 250 | 250 |
| தக்காளி | 150 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 100 |
| கோவா | 150 | 110 | 120 |
| கரட் | 140 | 160 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 140 | 250 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 200 | 250 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 65 | 60-80 |
| இராசவள்ளி | — | 300 | — |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 |
| முள்ளங்கி | 100 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | 40 |




# நரி சொன்ன யோசனை

**ஒரு பெரிய மரத்தில் ஆண் காக்கை ஒன்றும் பெண்காக்கை ஒன்றும் கூடி கட்டிச் சந்தோச மாக இருந்தன.**

ஒருநாள் அம்மரத்திலிருந்த பொந்துக்கு ஒரு கருநாகம் வந்து சேர்ந்தது.

சேர்ந்ததோடு இல்லாமல் காக்கை இடும் முட்டைகளை எல்லாம் ஒவ் வொரு நாளும் காலி செய்து கொண்டு வந்தது. காக்கைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

காக்கை ஒரு நரியிடம் சென்று ஆலோசனை கேட்டது. நரி சரியான யோசனை ஒன்றைச் சொன்னது.

"அந்தபுரத்தில் அரசகுமாரி குளிக்கிற இடத்திற்குச் சென்று அவள் குளிக்கும்போது நகைகளை கழட்டி ஒரு பக்கம் வைப்பாள்.

அந்த ஆபரணங்களில்பெரியதான ஒன்றை எடுத்துக்கொள். பலர் பார்க்கும்படி மெல்லப் பறந்து வந்து அவர்களின் எதிரில் அந்த நகையை பாம்பு இருக்கும் பொந்தில் போட்டு விடு என்றது.

"போட்டால்?" "போடு முதலில். அப்புறம் பார்". என்றது.

காக்கை தாமதிக்கவில்லை. பறந்து அந்தப்புரத்திற்கு சென்று பார்த்தது அரசகுமாரியின் நகைகளில் ஒரு முத்துமாலை அதன் கண்ணை உறுத்தியது. அதைக் கொத்தி எடுத்தது.

அங்கிருந்த அரசகுமாரியின் தோழிகள் காகம் முத்து மாலையைக் கொத்திக் கொண்டுப் போகுது' என்று கூச்சலிட்டனர். உடனே சேவகர்கள் ஓடி வந்தார்கள்.

காக்கை மெதுவாக அவர்களின் கண்ணில் படும்படி பறந்துவந்தது. அவர்கள் அருகில் வந்து பார்க்கும் படி அந்த முத்துமாலையை பாம்பு இருக்கும் பொந்தில் போட்டது.

உடனே சேவகர்கள் தம் கையில் இருந்த ஈட்டிகளால் அந்தப் பொந்தைக் குத்திக் கிளறினார்கள். சீறிக்கொண்டு வெளியே வந்த பாம்பைக்



கொன்றார்கள். 'அப்புறம் பார்' என்று நரியார் சொன்னதன் அர்த்தம் காக்கைக்குப் புரிந்தது. சேவகர்களும்முத்து மாலையை எடுத்து சென்றனர். சரியான யோசனையால் நிறைவான பலனை அடைந்த காக்கைத் தம்பதிகள் பெருமூச்சு விட்டன.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## ஆயிரத்தில் ஒருவன்

14


தஞ்சைப் பெரியகோயில்

அதிகாரப் போட்டியில் மனிதர்கள் மனிதத்தை இழக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனி மனிதர்களாகவே இயங்குகிறார்கள்.

ஆரம்ப நாட்களில் அன்பும் பண்புமாகப் பரிமளிப்பவர்கள் காலப்போக்கில் வேறு மனிதர்களாக மாற்றம் காண்பதுண்டு.

அதிகாரம், அதனை ஒட்டிய பயம் இரண்டும் தான் அவர்களை இறுகக் கட்டிப்போடுகின்றன. அதிகாரப் போட்டியில் மனிதர்கள் எப்போதும் இப்படியேதான்.

நம்பிக்கையுடன் காலம் கடந்து போகிறதே என்கிற கவலை ராஜராஜ சோழனுக்குக் கிடையாது.

அவர் சந்தர்ப்பத்தைத் தேடிப் போகவில்லை. தன்னை எல்லா விதத்திலும் தகுதியுடையவராக ஆக்கிக்கொண்டார். உரிய காலத்தில் வாய்ப்பு வரும் என்பது அவரது அபார நம்பிக்கை.

ராஜராஜனுக்கும் ஆட்சியின் சூட்சுமங்களைப் புரிந்துகொள்ள நிர்வாக நெளிவு சுளிவுகளை அறிந்து கொள்ள, நாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

அப்போது சோழர் அரச குடும்பத்தில் ராஜராஜனும் அவர் சகோதரி குந்தவையும் ராஜராஜனை வளர்த்த பெரிய பாட்டியும் கண்டராதித்தர் மனைவியான செம்பியன்மாதேவியாரும் அவர் மகன் மதுராந்தக உத்தமசோழரும் இருந்தனர்.

ஒரு கொலையைச் செய்துவிட்டு ஆட்சியைப் பிடித்த உத்தமசோழன் இறுதி வரை மக்களுக்குப் பிடிக்காத ஒரு மன்னராகவே வாழ்ந்து மறைந்தார். அதனால் ராஜராஜனுக்கு இருந்த ஒரு தடையும் நீங்கியது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி.985 இல் மக்களின் முழு ஆதரவோடு ராஜராஜன் அரியணை ஏறினார். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு தமிழக வரலாறு புதிய திசை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

உத்தமசோழனின் மகனான மதுராந்தகன் கண்டராதித்தன் பதவி கேட்டு எவ்விதத் தகராறும் செய்யவில்லை. ராஜராஜனுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கைப் பார்த்த போது அவரைத் தவிர வேறு யார் அரியணையில் அமர்ந்தாலும் ஒரு பெரிய கிளர்ச்சியே ஏற்படும் என்கிற நிலையை கண்டராதித்தன் நன்கு உணர்ந்திருந்தார்.

விஜயாலயன் ஆட்சிக்கு முன்பு சோழர்களின் தலைநகராக பழையாறை இருந்தது. ஆனால் கி.பி. 850 இல் தஞ்சை நகரைக் கைப்பற்றியதில் இருந்து சோழர்களின் தலைநகர் என்கிற அந்தஸ்து தஞ்சாவூருக்குக் கிடைத்தது.

பழையாறையில் சோழர்களுக்கு அரண்மனைகளும் மாடமாளிகைகளும் இருந்தன. அங்கு அவர்கள் குறுநில மன்னர்களாகவே வாழ்ந்ததால் ஒரு மாற்றத்துக்காகத் தங்கள் இருப்பிடத்தைத் தஞ்சாவூருக்கு மாற்றினார்கள்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டுவரை சோழர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்த சரித்திரம் இல்லை. ஆனால் விஜயாலயன் ஆட்சி ஆரம்பித்தது முதல் தஞ்சாவூரைச் சோழ அரசர்கள் விரும்ப ஆரம்பித்தார்கள்.

ஊரின் மையப்பகுதியில் ஓடும் காவிரியாற்றின் சத்தம், கால்மாட்டில் வைத்துத் தாலாட்டுவது போல இருந்தது. தஞ்சாவூர் மண், மனத்துக்கு அவ்வளவு நெருக்கமாக இருந்தது.

தஞ்சாவூர் சோழர்களின் தலைநகராகி சோழப் பேரரசின் மையப்புள்ளியுமாகியது.

சோழர்களின் தலைநகராக ஆனது முதல் காஞ்சிபுரம் போலத் தஞ்சாவூரும் ராஜகளை அடைந்தது. தம் முன்னோர்கள் வாழ்ந்த நகரம், சோழர்களின் தலைநகரம் என்கிற காரணங்கள் மட்டுமல்லாமல் தஞ்சாவூர் ஏராள மான சிவாலயங்கள் கொண்ட ஒரு பக்தி நிலமாகவும் இருந்ததால் ராஜராஜனின் அரசியல் வாழ்க்கையும் தஞ்சாவூரிலிருந்தே தொடங்கியது. (தொடரும்)

கால் தவறினால் சமாளித்துக் கொள்ளலாம்.
நாக்குத் தவறினால் மீளவே முடியாது.
- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னும் எத்தனை எத்தனை உசுப்பேத்தல்கள் இறைவா!

தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாகும் என்று தவத்திரு யோகர் சுவாமிகளிடம் கேட்ட போது, அவர் கண்ணீர் விட்டு அழுததான சம்பவத்தை நம் முன்னவர்கள் சொல்லக் கேட்டுள்ளோம்.

இதுபோல தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறியது பலருக்கும் தெரிந்த விடயமே.

ஆக, ஈழத் தமிழினத்தின் அவலம், தீராத நோய் என்பதை ஒரு மெய்ஞானியும் ஓர் அரசியல்ஞானியும் கூறிவைத்துள்ளனர்.

இப்போது தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறுகின்ற தகவல்களைக் கேட்கும் போதெல்லாம் எங்கள் இனத்தை நம்மவர்களே இப்படி ஏமாற்றுகிறார்களே என்று நினைக்கும்போது, அழுவதைவிட வேறு என்னதான் செய்ய முடியும்.

எத்தனை உயிர்கள் பிரிந்து போயின. எத்தனை அவலங்கள், எத்தனை இழப்புகள், எத்தனை அவமானங்கள், வாழமுடியாத சோகங்கள் இப்படியெல்லாம் ஆற்றலையும் ஓர் இனத்தின்; சில அரசியல் தரப்புகள், தமிழ் மக்களிடம் முன்வைக்கின்ற கருத்துக்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

அத்தனையும் அப்பட்டமான பொய், ஏமாற்று நாடகம்.

கடவுளே! இப்படியொரு இனப்பற்றற்ற கூட்டம் நம்மத்தியில் இருக்கும்போது மீட்சி என்பது எம் இனத்துக்கு எப்படிக் கிடைக்கும்.

அதிலும் ஒரு அரசியல் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு விட்டு, அதற்கு தென்பகுதியில் எதிர்ப்பு எழுந்துள்ளதாகக் காட்டப்படும் காட்சி இருக்கிறதே என்ன கொடுமை.

பாராளுமன்றப் பதவிக்காக இப்படியொரு ஏமாற்றுத்துரோகமா? இப்படியொரு பதவியைப் பெற்று இந்த மண்ணில் எதைத்தான் சாதிக்கப் போகின்றீர்கள்.

கடந்த காலங்களில் தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனத்தை அடியோடு மறந்துபோவது தான் எங்கள் அரசியல் வரலாறு.

நிலைமை இதுவாக இருக்கையில், தேர்தல் விஞ்ஞாபனம் கண்டு தென்பகுதி விரண்டு போவதாகவும் பயந்து ஓடப்போவதாகவும் கூறுகின்ற உசுப்பேத்தல்கள் இன்னும் தேவையா?

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! தமிழ் இனத்துக்காக உயிரிழந்த எம் உறவுகளின் பெயரால் கேட்கிறோம். உங்களுக்குப் பாராளுமன்றப் பதவி தேவை என்றால் எடுத்துச் செல்லுங்கள். அது பற்றிக் கவலையில்லை.

ஆனால் எங்கள் மக்களை இன்னும் ஏமாற்றாதீர்கள். அவர்கள் பேரினவாதத்தால் நொந்து போயுள்ளனர்.

# கொரோனாவை கட்டுப்படுத்துவதுடன் நாடும் அபிவிருத்தி செய்யப்படுகிறது

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுவரும் அதேவேளையில், நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

காலியில் நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மந்தமடைந்தது என சுட்டிக்காட்டினார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்தபோது, உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடாக இருந்த இலங்கை பலவீனமான பொருளாதாரம் கொண்ட நாடாக மாறியது.

எனவேதான் கடந்த 5 ஆண்டுகால அழிவுக்குப் பின்னர் நாடு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று மக்கள் கருதுவதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் பொருளாதார ரீதியாக கடும் தாக்கத்தை நாடு எதிர்கொண்ட நேரத்திலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றார் என்றும் மறுபுறம், கடந்த அரசாங்கத்தின் தோல்விகளால் பொது மக்கள் கடனாளிகளாகவும் கடும் பொருளாதார சவால்களை எதிர கொள்ள போராடி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வைரஸ் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தும் அதே



வேளையில், அரசாங்கம் நாட்டை அபிவிருத்தி செய்யத் தொடங்கியுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ஜ-4)

# வாக்காளர்களுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் குமிழ் முனைப்பேனா எடுத்து வரவேண்டும் என்பதோடு தனது அடையாள அட்டையை தனது கையிலேயே வைத்து அதிகாரிக்கு உயர்த்திக் காண்பிக்க வேண்டும் என தேர்தல்கள் உதவி ஆணையாளர் ரீ. ஹென்ஸ்மேன் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழு அமர்வு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு ஆனந்தசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மெலும் தெரிவிக்கையில்,

அத்துடன், எதிர்வருகின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

வாக்காளர்கள் நீலம் அல்லது கறுப்பு குமிழ் முனைப் பேனா தம்வசம் எடுத்து வர வேண்டும். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பேனாக்கள் வாக்களிப்பு நிலையத்தில் வழங்கப் படமாட்டாது.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் அலுவலர் வழமையாக வாக்காளர் அடையாள அட்டையை தனது கையில் எடுத்து சரிபார்த்து உறுதிப்படுத்துவதுண்டு.

விரலுக்கு சாயம் பூசுவதும் கூட மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் அதிகரித்த செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்திலும் தேர்தல் அலுவலரின் கை வாக்காளரின் கை மீது படாது. தூரிகை கொண்டு மை பூசப்படும் ஒருவருக்கு ஒரு தூரிகை என்ற ஒழுங்கில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஜ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உன்னையே உன்னால் அடக்கி ஆள முடியா விட்டால் ஒருபோதும் உன்னால் மற்றவர்களை அடக்கி ஆள முடியாது. -ஸ்ரீ அரவிந்தர்**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பொக்கணை, தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா கல்லூரி, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, அச்செழு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், வாரிக்குட்டியூர், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, கடலேரி, சாந்திபுரம், தரவன்கோட்டை, **South bar**, தலைமன்னார் கடற்படை முகாம், கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, **Timex** ஆடைத்தொழிற்சாலை, **Palmyrah house** கரைசல் தலைமன்னார் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தியானம்



இயற்கைக்கு அடிமையாக இருப்பதை எதிர்க்க உதவும் சக்தியே தியானம். இயற்கையினால் ஏற்படும் தளைகளைத் தியானத்தால் நிச்சயமாக மாற்றி விட முடியும்.

இந்த ஆற்றல் உங்களிடமிருந்தால் அதுவே சுவர்க்கம். அதுவே விடுதலை அல்லவா? அதுவே தியானத்தால் பெறும் ஆற்றல்.

இந்த ஆற்றலை எப்படிப் பெறுவது? இதை வெவ்வேறு முறைகளில் பெறமுடியும்.

ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வழியில் செல்லும். ஆயினும் பொதுவான நியதி இதுதான். மனத்தின் எண்ண அலைகளை அடக்குங்கள்.

மனம் நீர் பெருகிய ஓர் ஏரி போன்றது. அதில் விழும் ஒவ்வொரு கல்லும் அலைகளை எழுப்புகிறது. இந்த அலைகளால் எமது பிம்பம் ஏரியின் நீரில் பிரதிபலிக்கிறது.

# தேர்தல் பிரசாரங்களுக்கு எனது புகைப்படத்தை பயன்படுத்த வேண்டாம்

## பேராயர் கர்தினால் மல்கம் வேண்டுகோள்


(கொழும்பு)

**எனது புகைப்படங்களை தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்த வேண்டாமென கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பொதுத்தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்கள், மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் புகைப்படங்களை துண்டுப்பிரசுரங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே குறித்த செயற்பாட்டுக்கு ரஞ்சித் ஆண்டகை எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "துண்டுப்பிரசுரங்கள் மற்றும் விளம்பரங்களில் எனது அனுமதியின்றி என்னுடைய புகைப்படங்களை பயன்படுத்து



கிறார்கள்.

அதாவது சில வேட்பாளர்கள், என்னுடன் எடுக்கப்பட்ட பழைய புகைப்படங்களை, தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதை நான் கவனித்தேன்.

எனவே, பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனது அனுமதியின்றி என்னுடைய புகைப்படங்களை பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேவேளை கத்தோலிக்க திருச்சபை, எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையும் அல்லது எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# அபிவிருத்தி என்பது வார்த்தையில் மட்டுமல்ல செயலிலும் இருக்கவேண்டும்- முத்தையா பிரபு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய ஆட்சியின் கீழ் மலையகத்தில் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் முத்தையா பிரபு தெரிவித்தார்.

லிந்துலை பெயார்வெல் தோட்டத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "ஜனாதிபதிக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அவரின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை எமது பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அபிவிருத்தி என்பது வார்த்தையில் மட்டுமல்ல செயலிலும் இருக்கவேண்டும் என்பதற்காகவே நான் அரசியலில் குதித்துள்ளேன். தேர்தல் காலங்களில் வாக் குறுதிகளை வழங்கிவிட்டு பலரும் ஏமாற்றுவார்கள். ஆனால், செய்துகாட்டுவதற்காகவே நாம் அரசியலுக்கு வந்துள்ளோம்.

தொழிற்சாலைகளை உருவாக்கினால் உதிரி தொழில்களும் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். வீட்டின் அபிவிருத்தி கூடினால் மட்டுமே அபிவிருத்தி என்பது அர்த்தமுடையதாக இருக்கும். சுதந்திரம் கிடைத்து 72 வருடங்கள் கடந்தும் தமிழ் அரசியல் வாதிகளால் நுவரெலியாவில் ஒரு தமிழ்த் தேசிய பாடசாலையை உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான அரசியல் மாற வேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே நான் வந்துள்ளேன். எனக்கும் வாய்ப்பு தந்து பாருங்கள், நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன்" என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு வாகனங்கள் விபத்து


(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக பயணித்த இரு வாகனங்களும் மகரகமவில் வைத்து விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் வாகனங்களுக்கு மாத்திரம் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி, மீண்டும் கொழும்பு நோக்கி பயணிக்கும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக அவரின் வாகனத்திற்குப் பின்னால் பயணித்த பாதுகாப்பு வாகன



த்தின் மீது ஆட்டோ ஒன்று நேருக்கு நேர் மோதியுள்ளது.

இதனால் பின்னால் வந்த வாகனம், முன்னால் பயணித்த வாகனத்துடன் மோதியுள்ளது. இதனால் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மகரகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சுகாதார ஊழியர்களுக்கு பிரிட்டன் துரித விசா

(கொழும்பு)

நாட்டின் சுகாதார ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு துரிதமாக விசா அனுமதியை வழங்குவதற்காக "சுகாதார மற்றும் பாதுகாப்பு விசா முறை" என்ற வேலைத் திட்டத்தை பிரித்தானியா முன் னெடுத்துள்ளது.

தகுதியான இலங்கையர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு துரிதமாக விசாவை வழங்குதல், விசா கட்டணங்களை குறைத்தல் மற்றும் குடியேற்ற சுகாதார மேலதிக கட்டணங்களை இடை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில மாதங்களில் உரிய முறையில் நடைமுறைக்கு வரவுள்ள இந்த சுகாதார மற்றும் பராமரிப்பு விசா அனுமதியின் ஊடாக சுகாதார தொழில் துறையினரை பிரித்தானியாவின் தேசிய சுகாதார துறையில் துரிதமாக இணைப்பதற்காக இந்த வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# ஐ.பி.எல் போட்டியை நடத்த தயார்

## ஐக்கிய அரபு இராச்சியம்

ஐ.பி.எல். கிரிக்கெட் லீக்கை எப்போது வேண்டுமென்றாலும் நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபை தொடர்ச்சியாக கூறி வருகிறது.


கொரோனா வைரஸ் தொற்றால் ஐ.பி.எல். 2020 இருபது-20 லீக் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இருபது-20 உலகக்கிண்ண போட்டியை நடத்த வாய்ப்பில்லாததால் செப்டெம்பர், ஒக்டோபரில் ஐ.பி.எல். லீக்கை நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் கொரோனா தொற்று ஓரளவித்த கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதால், போட்டியை எங்கள் நாட்டில் நடத்தலாம் என விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தியாவைத் தவிர்த்து வெளியில் போட்டியை நடத்தும் எண்ணம் இல்லை. அப்படி இருந்தாலும் அது இறுதி கட்ட முயற்சியாகத்தான் இருக்கும் என பி.சி.சி.ஐ தரப்பு கூறுகிறது. இதனால் ஐ.பி.எல் லீக் நடந்தால் இந்தியாவில்தான் நடக்கும் என ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் போட்டி நடந்தாலும் பரவாயில்லை. ஒரு வேளை இந்தியாவில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டால், இறுதி நேரத்தில் அழைக்கலாம் என்பதால் நாங்கள் தயார் நிலையிலேயே இருக்கிறோம் என டுபாய் விளையாட்டு சிட்டியின் கிரிக்கெட் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான தலைவர் சல்மான் ஹனிப் தெரிவித்தார்.

இதுகுறித்து சல்மான் மேலும் தெரிவிக்கையில், "டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் ஐ.சி.சி அகடமி இருபது-20 லீக் போட்டிக்கு தயாராக இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ள மைதானம். இங்கு 9 ஆடுகளங்கள் உள்ளன. குறுகிய நாட்களுக்குள் அதிகப்படியாக போட்டிகளை நடத்த முடியும். நாங்கள் எந்த போட்டிக்கான அட்டவணையையும் தயார் செய்யாததால் ஆடுகளங்கள் புதிதாக இருக்கின்றன" எனவும் அவர் தெரிவித்தார். (4)

# அபராதத்துடன் தப்பித்தார் ஆர்ச்சர்



உயிர் பாதுகாப்பு வளையத்தை மீறியதாக 2ஆவது டெஸ்டில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்ட இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் அபராதத்துடன் தப்பித்துள்ளார்.

கொரோனா தடுப்பு விதிகளை மீறி மான்செஸ்டர் விளையாட்டரங்கிற்கு செல்லும் வழியில் தனது வீட்டுக்கு சென்று வந்த ஜோப்ரா ஆர்ச்சர் மீது கிரிக்கெட் வாரியம் நடவடிக்கை எடுத்தது.

இதனையடுத்து, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் இருந்து நீக்கப்பட்ட அவரை, 5 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்ள இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரணை நடத்தியது. இதில் அவருக்கு குறிப்பிட்ட தொகை அபராதமாக விதிக்கப்பட்டதுடன், எழுத்துபூர்வமாக எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

அபராதத்துடன் தப்பியதால் அவர் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இறுதி டெஸ்டில் விளையாடுவதில் உள்ள சிக்கல் நீங்கியது. இந்நிலையில் இரண்டு முறை கொரோனா சோதனை நடத்தப்பட்டு தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால், 21ஆம் திகதி அவரால் அணியுடன் இணைந்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## ஒக்ரோபர் 9ஆம்...

அத்துடன், 11, 12 மற்றும் 13 தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஏனைய தரங்களுக்காக எதிர்வரும் ஒகஸ்ட் 10ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## மரக்கிளை முறி...

துள்ளது.

நேற்று மதியம் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் அவரது உறவினர் ஒருவருடன் அயல் வீட்டிற்குச் சென்றுவிட்டு வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். இதன்போது வீசிய பலத்த காற்றில் வீதிக்கரையில் இருந்த வேப்ப மரத்தின் கிளை ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் குறித்த குழந்தை மற்றும் ஏனைய சிறுவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன்,

அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளிற்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

எனினும் காயமடைந்திருந்த குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

சம்பவத்தில் ஆயிலடிப் பகுதியைச் சேர்ந்த மதுசன் லக்சாயினி என்ற ஒன்றரை வயது குழந்தையே மரணமடைந்துள்ளதுடன், ஜீவிதா (வயது-10), சர்மிலாதேவி (வயது-8) ஆகிய சிறுமிகள் காயமடைந்துள்ளனர். (ம-3,299)

## ஒக்ஸ்போர்ட் பல்...

கரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1,077 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடக்கூடிய வெள்ளை இரத்த அணுக்களை உருவாக்க, குறித்த மருந்து வழிவகுத்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1,000 தன்னார்வலர்களை உள்ளடக்கிய "முதலாம் கட்ட" ஆய்வின் முடிவுகள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கண்டுபிடிப்புக்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவை. ஆனால் இது பாதுகாப்பை வழங்குவதற்கு போதுமானதா என்பதை அறிய இன்னும் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 10 கோடி தடுப்பூசிகளை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திடம் இருந்து கொள்வனவு செய்ய பிரித்தானியா நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-3)

## க.பொ.த (உ/த)...

வித்துள்ளது.

அத்துடன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் 7ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரையும் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 13ஆம் திகதியும் நடைபெறும் என்றும் கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், மாணவர்களினது கோரிக்கைக்கு அமைய பரீட்சைகள் ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்திரானந்தா தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 12ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 6ஆம் திகதி வரையும் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 11ஆம் திகதியும் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

## வரம்பு மீறிய அதி...

திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, பாதுக்கை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேர்தலுக்குத் தேர்தல் புதிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். தற்போதைய அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்குவது என்பது ஒரு தரப்புக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதாக அமையும்.

வரம்புக்கு மீறிய அதிகாரம் அழிவுகளை ஏற்படுத்த காரணமாக அமையும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க எச்சரித்துள்ளார். (ம-3)

## சீரற்ற காலநிலை...

ஆரம்பித்துள்ள சீரற்ற காலநிலை சில தினங்களுக்குத் தொடரும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனால் மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் கடும் மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பில் சீத்தாவாக்கை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள மற்றும் பலிந்தனுவர பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட மற்றும் எஹெலியகொட பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் காலி மாவட்டத்தில் அல்பிட்டிய, நாகொட மற்றும் நியாகம ஆகிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுழிபுரம் மேற்குப்...

தில் 3 பேர் படுகாயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தனிப்பட்ட முரண்பாடு ஒன்றே வாள் வெட்டுச் சம்பவமாகியுள்ளது. இதில் மூவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-3)

## கிளிநொச்சியில்...

அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் இந்த பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி நாளை புதன்கிழமை நாச்சிக்குடா பகுதியிலும் மறுநாள் வியாழக்கிழமை கிளிநொச்சி நகரிலும் வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பளை பகுதியிலும் இந்த எழுமாறாக தெரிவு செய்யப்படும் நபர்களிடம் கொரோனா தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி தென்பகுதிக்குச் சென்று வந்தவர்கள், பாரவூர்திச் சாரதிகள், பொலிஸார், முதியோர் இல்லத்தில் தங்கியிருப்போர், விடுதிகளில் தங்கியிருப்போர் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் 3 நாட்களில் 70 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனைக்கான உயிரியல் மாதிரிகள் பெறப்படவுள்ளன.

இம் மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் வைத்தியசாலை உள்ளிட்ட அரவணைப்படுத்தப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு அனுப்பப்படவுள்ளன.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாடசாலைகளை...

கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான எதுவித நடவடிக்கைகளையும் இன்னமும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. மற்றொரு பக்கம் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே நாட்டை மீட்டெடுக்க முடியும்.

பாடசாலைகளை மீள ஆரம்பிக்க முன்னர் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் நிலை எதிர்வரும் மாதங்களில் எத்தகையதாக இருக்கும்என்ற எதிர்வு ▷24

## காத்தோட்டிக்...

விரத நாளுக்கு முதல் நாளான நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டின் முக்கிய சந்தையான திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் இம்முறை ▷24


சாவகச்சேரியில் பேரதிஷ்டம்

19.07.2020 அன்று சீட்டிழுக்கப்பட்ட NLB யின் " செவன " (சீ. இல 279) லொத்தரின் மூலம் சாவகச்சேரி பிரதேசத்தில் நான்கு இலக்கங்களும் சரியாக பொருந்தியதால் அதிஷ்டசாலி ஒருவர் பத்து லட்சம் ரூபாய் வென்றுள்ளார். 6 கோடி 11 லட்சம் வெல்லப்பட்ட அதே இடத்தில் இப் பத்து லட்சம் ரூபாய் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

NLB விற்பனை முகவர்
(பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி (N-220054)
T.P : 077 357 8224

(C-9926)

மஹஜன சம்பத
திகதி 2020/07/20
சீட்டிழுப்பு இலக்கம் 4189
E 6 8 3 2 1 4

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 07 / 20
சீட்டிழுப்பு இலக்கம் 1519
02 | 11 15 31 50
2nd 1 8 5

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 20-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2484
Y 03 25 29 50

மெகா பவர்
திகதி 20/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 556
S 20 27 30 38 71

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1598 திகதி 2020/07/20
S 10 15 16 29

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1179
சீட்டிழுப்பு திகதி 20.07.2020 ஊதா
T 17 22 25 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,838,180

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 986
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.07.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,569,280/-
10 17 24 34 X

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3340 திகதி: 2020.07.20
நீலம் திங்கட்கிழமை
01 11 50 63 W
அடுத்த புதன்கிழமை ஜக்பொட் 33,804,485/-

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2867 வர்ணம் மஞ்சள் திகதி 20.07.2020
16 30 33 42 கும்பம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,000,000
Web: www.dlb.lk

## தேர்தலில் அரச உத்தியோகத்தர்கள்

# அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை




## மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெறும் நேரத்தில், அவை நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு என்பனவற்றுக்கு அமைவாக நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் இருக்கின்றது என்று வலியுறுத்தியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச உத்தியோகத்தர்கள் தமது அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்துதல், சட்டத்தின் வரையரையை மீறி செயற்படுவதோடு நிறைவேற்ற வேண்டிய கடமைகளிலிருந்து விலகுதல் ஆகியவற்றில் ஈடுபடும்பட்சத்தில் அது குறித்து ஆணைக்குழுவினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.**

பொதுத் தேர்தல் காலத்தில் மாகாண அரசசேவை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பான நெறிப்படுத்தல்கள் என்ற தலைப்பில் ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி தீபிகா உடகமவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அரச உத்தியோகத்தர்கள் தமது அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தல், சட்டத்தின் வரையறையை மீறி செயற்படுவதோடு நிறைவேற்ற வேண்டிய கடமைகளிலிருந்து விலகுதல், காரணமின்றிய தாமதங்கள் ஆகியவை அரசியலமைப்பின்படி அடிப்படை மனித உரிமை மீறல்களாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் குறித்த உத்தியோகத்தருக்கு எதிராகப் புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்வதற்கும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் ஆணைக்குழுவிற்கு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்படி அதிகாரமுண்டு.

எனவே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்கள் தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுகின்றனரா என்பது தொடர்பில் கண்காணிக்கப்படும். ஆகவே அரச ஊழியர்கள் தமது அலுவல்களை சட்டத்திற்கு அமைவாகவும், பக்கச் சார்பற்ற வகையிலும், நீதியான முறையிலும் நிறைவேற்ற வேண்டும். சட்டம் அமுல்படுத்தப்படாதிருத்தல், ஒரு பிரிவினருக்கு மாத்திரம் சாதகமான வகையில் பக்கச் சார்பாக அதிகாரங்களைப் பயன்படுத்துதல் போன்ற விடயங்களுக்கு உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட பொறுப்பை ஏற்கவேண்டியிருக்கும் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ம-3)

## பாடசாலைகளை...

கூறலை சுகாதாரப்பிரிவு அதிகாரிகளிடமிருந்து எழுத்து மூலமாகப் பெற்றுக் கொண்டு, அதனடிப்படையிலேயே தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

எனினும் அரசாங்கம் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்காத நிலையில், கொரோனா வைரஸ் பரவல் நிலை தொடர்பில் சுகாதார அதிகாரிகளினால் எதனையும் உறுதியாகக் கூறமுடியாது என்றே நான் கருதுகின்றேன். ஆனால் இத்தகைய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைத் திகதிகள் குறித்துத் தீர்மானமெடுக்காதவிடத்து, அது மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்றார். (ம-3)

## வர்த்தமானி...

காரிகளால் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்க முடியும். எனவே இந்த வர்த்தமானி அறிவித்தல் ஒரு போதும் கோவிட்-19 கட்டுப்படுத்தலுக்கு பிரயோசனமாக அமையாது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவது 1981 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட தொற்று நோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டமாகும். இந்த அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது பரிசோதகர்களாவர்.

எனவே சட்டத்தின் அடிப்படையில் சுகாதார அமைச்சருக்கு எமக்கு அந்த அதிகாரங்களை வழங்க முடியும். அவ்வாறில்லை என்றால் மக்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டாலும் தனிமைப்படுத்தப்படுபவர்களுக்கு எமது கட்டளைகளை சவாலுக்குட்படுத்த முடியும்.

சுகாதார அமைச்சோ அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமோ இதனை இது வரையில் நிறைவேற்றவில்லை. அநாவசிய அதிகாரங்களை நாம் கோருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அவ்வாறு அநாவசியமான எவ்வித அதிகாரத்தையும் நாம் கோரவில்லை.

எமது அதிகாரங்களை சட்ட ரீதியானதாக உறுதிப்படுத்தும் வரை எம்மால் கடமைகளில் ஈடுபட முடியாது. 16 ஆம் திகதி கோவிட்-19 கட்டுப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்தும் சனிக்கிழமை அனைத்து தொற்று நோய் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்தும் விலகுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அடுத்து வரும் நாட்களிலேனும் இதற்கான தீர்வு காணப்படாவிட்டால் எமது தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ம-3)

## காத்தோட்டிக்காய்...

காத்தோட்டிக்காய் வரத்து பெருமளவில் குறைவடைந்தமையால் ஒரு சோடி காத்தோட்டிக்காய் 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று முன்தினம் மதியத்திற்குப் பின்னர் மேற்படி சந்தையில் காத்தோட்டிக்காய் இருப்புக் காணப்படவில்லை.

நேற்று ஒரு காத்தோட்டிக்காய் 200 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்பனையானது. இதேவேளை, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளிலிருந்தே வழமையாக காத்தோட்டிக்காய் யாழிலுள்ள சந்தைகளுக்கு வருகின்ற போதும் இம் முறை வரத்து வெகுவாக குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

இலங்கை விசா நீடிப்பு
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT
எமது கிளைகள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி
நெல்லியடி கொடிகாமம்
புதுக்குடியிருப்பு சுன்னாகம்
மருதங்கேணி பருத்தித்துறை
சாவகச்சேரி திருகோணமலை
மானிப்பாய் வல்வெட்டித்துறை
(C-9624)
V2 TRAVELS 0768227499



அதி உயர்தரம் மிக்க செவன் ஸ்ரார் ஓடுகள்
விற்பனை முகவரும் ஏக விநியோகஸ்தரும்.
(கதிர் ஸ்ரார் ஓடுகளும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.)
தொடர்புகளுக்கு
1075, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
077 651 3299
(3366)



விரைவு பொதிகள் சேவை
DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 1995
076 283 2397
(3176)



பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.கிளிநொச்சி மாவட்டம்
"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"
2 10
யோகேஸ்வரன் ஜெயக்குமார்
ஓய்வு நிலை உதவிப் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்.
உறுப்பினர் - சாவகச்சேரி நகர சபை.
விருப்பு இலக்கம்
6
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
X 2 6 10
தாயகம் - தேசியம் - சுய நிர்ணய உரிமை





இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.